# தானியேல்

## தானியேல் (605-536 கி..மு.)

**அறிமுகம்:**

1. கி.மு. 605இல் இளம் தானியேல் நேபுகாத்நேச்சாரின் முதலாவது முற்றுகையின்போது சிறைப்பிடக்கப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்டவராகும்.

2. இவர் அரசபரம்பரையைச் சேர்ந்தவராகும்.

3. இவர் எந்தவித பிரச்சனைகளுமின்றி நேபுகாத்நேச்சார், பெல்ஷாத்சார், தரியு அகிய மூன்று ராஜாக்களின் நிர்வாகத்திலும் பணியாற்றியவர்.

4. இவர் பரலேகத் தூதுவர்களாகிய காபிரியேல், மீகாவேல் என்பவர்களுடனும் ஊழியம் செய்துள்ளார் என்று பதிவுகள் உள்ளன. (9:21; 10:13).

5. பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் எல்லாவற்றையும்விட, தானியேல் புத்தகம் அந்திக்கிறிஸ்த்து பற்றி அதிகமாகக் கூறுகின்றது.

6. தானியேல் காலத்தில் எசேக்கியேல் பாபிலோனில் பிறிதொரு இடத்திலிருந்து தீர்க்கதரிசனம் சொன்னார். இவர் தானியேல் பற்றிக் கூறியுள்ளதாவது : a. தானியேலுடைய நீதி நோவாவுடனும், யோபுவுடனும் ஒப்பிடப்பட்டுள்ளது. (எசேக்கியேல். 14:14).

b. தானியேலின் ஞானம்பற்றியும் கூறப்பட்டுள்ளது. (எசேக்கியேல். 28:3).

7. இயேசுவும் தன்னுடைய ஒலிவமலைப்பிரசங்கத்தில் தானியேலைப்பற்றிக் கூறியுள்ளார். (மத்தேயு24:15).

8. வழக்கத்திற்கு மாறாக தானியேலின் மத்திய பகுதிகள் அராமிக் மொழியில் எழுதப்பட்டுள்ளது. (2:4–7:28)

9. இவர் யோசேப்புடன் இணைத்துக் கூறப்படுகின்றார், காரணம் இருவருக்கும் கனவுகளை மொழிபெயர்க்கும் வரங்கள் செயற்பட்டன. (ஆதி. 37:5, 9; 40:8; 41:25 தானி. 2:24; 4:19.)

10. ஐந்து அற்புதங்கள் வேதாகமத்தில் நிகழ்ந்த காலத்தின் மூன்றாவது தானியேல் புத்தகக் காலமாகும். அவையாவன:

a. மோசேயினதும்,யோசுவாவினுடையதுமான காலம்.

b. எலியாவினதும், எலிசாவினதும் காலம்.

c. தானியேலுடைய காலம்.

d. இயசுவினதும், அவருடைய சீடர்களின் காலமும்.

e. பேதுருவினுடையதும், பவுலினுடையதும் காலம்.

11. தானியேலின் வாழ்க்கை தீர்க்கதரிசனமும், ஜெபமும் நிறைந்த வாழ்க்கையாகும்.

## I. தெய்வீக உணவு.

A. தானியேலின் மனவுறுதி (1:1-8).

1. நேபுகாத்நேச்சார் சில இளைஞர்களைத் தெரிவு செய்து மூன்றுவருட பயிற்சி நிலையில் வைத்திருந்தார். இந்த மாணவர்களுடன் தானியேலும் அவரது மூன்று நண்பர்களும் அடங்கியிருந்தார்கள். (வ. 4).

2. இந்த இளைஞர்களுக்கு நல்ல உணவாகிய ராஜாவின் உணவும், திராட்சைரசமும் கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. (1:5).
3. பிரதானிகளின் தலைவன் அவர்களுக்குப் புதுப் பெயர்களைக் கொடுத்தான். (வ. 7). பிரதானிகளின் தலைவன், தானியேலுக்கு பெல்தெஷாத்சார் என்றும், அனனியாவுக்கு சாத்ராக் என்றும், மீஷாவேலுக்கு மேஷாக் என்றும், அசரியாவுக்கு ஆபேத்நேகோ என்றும் மறுபெயரிட்டான். பெயர் மாற்றம் செய்தால் காலப்போக்கில் பாபிலோனியரும் இவர்கள் தங்கள் இனமக்கள் என கருதுவார்கள் என்ற எதிர்பார்ப்பில் மாற்றம் செய்யப்பட்டது.

தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் இருந்தார்கள்

a. ***அனனியாவுக்கு****( கர்த்தர் கிருபையுள்ளவர்) சாத்ராக் (சூரியகடவுளினால் பிரகாசிப்பவர்) என்றும்* பெயர் மாற்றப்பட்டது.

b. மீஷாவேல் ( கர்த்தரைப் போன்றவர்) மேஷாக் (இஸ்தாரைப் போன்றவர்) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. .

c. அசரியா (கர்த்தர் என் உதவியானவர்) ஆபேத்நேகோ (நாபு என்ற கடவுளின் அடிமை)என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. கல்விக்கும், ஞானத்திற்கும் பொறுப்பான பாபிலோனியத் தெய்வம் **நாபு** ஆகும்.

d. தானியேல் (கர்த்தர் நியாயாதிபதி) பெல்தெஷாத்சார் (பெல் என்ற தெய்வத்தின் இளவரசர்) என்றும் மாற்றப்பட்டது. பெல் என்பது பாபிலோனின் அரசாளும் தெய்வமாகும். இது சீசஸ், அல்லது யுப்பிற்றல் என்ற தெய்வங்களுக்குச் சமமானது.

4. தானியேல் இந்த புதிய பெயரை ஏற்றுக் கொண்டான், ஆனாலும் ராஜாவின் தீர்மானங்களுக்கு அமைய செயற்படுவதில்லை என்று தன்னுடைய மனதில் தீர்மானித்தான். (1:8). அவருடைய தீர்மானத்தில் மூன்றுவிடயங்கள் உள்ளடங்கியிருந்தன.

a. திராட்சை ரசமும், இறைச்சியும் பொய்யான தெய்வங்களுக்கு பலியிடப்படுபவை.

b. அவர்களால் வழங்கப்படும் உணவு மோசேயின் நியாயப் பிரமாணத்திற்கு எதிரானவை. (லேவியராகமம். 11:44-47).

c. முன்பாகவே அவர் நசரேய விரதம் மேற்கொள்ளும் பொருத்தனையுடையவர். (எண். 6:3).

5. தானியேலைப் பல வழிகளிலும் உலகத்தான் போல் ஆக்குவதற்கு சாத்தான் பலவழிகளிலும் முயற்சி செய்தான். **சாத்தானின் தீர்மானங்களாவன**.

a. அரசனால் கட்டளையிடப்பட்டபடியால், இது மோசேயின் நியாயப்பிரமாணம் என நினைத்தான்.

b. கீழ்ப்படியாமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

c. இது எல்லா முன்னேற்றங்களையும் தடை செய்யும்.

d. பாபிலோனில் அல்லது ரோமாபுரியில், தேசத்தவர்கள் செய்வது போல செய்ய வேண்டும்.

e. சொந்த ஊரில் இருந்து அனேக தூரத்தில் இருக்கின்றபடியால், அவரை ஒருவருக்கும் தெரியாது.

**B. தானியேலுக்கான அங்கீகாரம். (1:8-14).**

1. ராஜாவின் உணவைத் தவிர்த்து ஏனைய உணவுகளைச் சாப்பிடுவதற்கான அங்கீகாரத்தைத் தானியேல் தேடினான், நேபுகாத்நேச்சாரின் பயத்தினால் அது மறுக்கப்பட்டது. பெயர் மாற்றத்தை ஏற்ற தானியேல் உணவை ஏற்கவில்லை. தனது பரிசுத்தத்தை காற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் குறியாய் இருந்தார்.

2. பத்துநாள்வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப்பாரும்; எங்களுக்குப் புசிக்கப் பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து, எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும்; பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும் என்றான். (1:11-13). இறுதியில் பருப்பு முதலான மரக்கறிகளைச் சாப்பிடுவதற்கு அங்கீகாரம் கிடைத்தது. தானியேலின் விசுவாசத்தை இதில் காண்கிறோம்.

**C. தானியேலுக்கு கிடைத்த வெகுமதிகள். (1:15-21).** ஆவிக்குரிய, சரீரத்துக்குரிய நன்மைகள்.

1. கர்த்தரின் கையிலிருந்து கிடைத்தவை.

a. பத்துநாள் முடிவில் தானியேலும், அவருடைய நண்பர்களும் நல்ல முகக்களையுடனும் திடகாத்திரமாகவும் இருந்தார்கள். இதுவே தானியேல் புத்தகத்தில் காணப்பட்ட முதல் அற்புதமாகும்.(1:15).

b. மூன்று வருட முடிவில் தனியேலும், அவரது நண்பர்களும் பத்துமடங்கு திடகாத்திர முள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். இதற்கும் மேலாக தரிசனங்களையும், சொப்பனங்களையும் அதிகமாக விளங்கிக் கொள்ளும் விஷேசித்த வரங்களைத் தானியேலுக்கு கர்த்தர் கொடுத்திருந்தார். (தானி. 2:31; 4:19).

2. நேபுகாத்நேச்சரின் (1:21). கரத்திலிருந்து தானியேல் அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வண்னம் நியமிக்கப்பட்டார். இவர் பலதரப்பட்ட பாபிலோனிய ராஜாக்களினதும், பெர்சிய ராஜாக்களினதும் அரசியல் ஆலோசகராக எழுபது வருட காலப்பகுதியில் கடமையாற்றினார்.

**II. சிலைகளும் கல்லும்.**

A. பாபிலோனியர்களின் தயக்கம். (2:1-13).

1. நேபுகாத்நேச்சார் சொப்பனங்களைக் கண்டான்; அதினால், அவனுடைய ஆவி கலங்கி, அவனுடைய நித்திரை கலைந்தது. அப்பொழுது ராஜா தன் சொப்பனங்களைத் தனக்குத் தெரிவிக்கும்பொருட்டுச் சாஸ்திரிகளையும் ஜோசியரையும் சூனியக்காரரையும் கல்தேயரையும் அழைக்கச் சொன்னான்; அவர்கள் வந்து, ராஜசமுகத்தில் நின்றார்கள். (2:1-3).

2. சொப்பனத்தையும் கூறி அதன் அர்த்தத்தையும் உடனடியாக அறிவிக்கும்படி ராஜா உறுதியாகக் கூறினான். (2:4). இந்த வார்த்தை தொடங்கி 7: 28 வரை தானியேல் புத்தகம் அராமிக் மொழியில் எழுதப்பட்டுள்ளது. இந்தப் பாஷை நோபுகாத்நேச்சாரின் நீதிமன்றத்தில் பேசப்பட்டது. (இந்தப் பாஷை புறஜாதிகளின் பாஷையாக இருந்தபடியால் தானியேல் இந்தப் பாஷையைப் பயன்படுத்தினார், இந்தப்புத்தகத்தின் சில பகுதிகள் நான்கு உலகவல்லரசுகளுடன் தொடர்புபட்டதாகும். )

3. தன்னுடைய சொப்பனத்தைக் கூறமுடியாது என்று கடும் தொனியில் நேபுகாத்நேச்சார் கூறினார்.: "தன் சிந்தையிலிருந்து சொப்பனம் போய்விட்டது என்று கூறினார்" (வ. 5 அவர் சொப்பனத்தை மறந்து விட்டேன் என்று கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது, ஆனால் அவர் உடனடியாக சொப்பனத்தையும் கூறி, அதன் பொருளையும் கூறும்படி கட்டளையிட்டார்.

4. நீங்கள் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்கு அறிவியாமற்போனால் தலை துண்டித்துப் போடப்படுவீர்கள்; சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் தெரிவித்தீர்களேயாகில், என்னிடத்தில் வெகுமதிகளையும் பரிசுகளையும் மிகுந்த கனத்தையும் பெறுவீர்கள்; (2:5, 6). இச்சம்பவத்திலிருந்து மிகவும் கொடுமையான அரசன் நேபுகாத்நேச்சார் என்பது புரிகிறது.

5. ராஜா கேட்கிற காரியம் மிகவும் அருமையானது; மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம்பண்ணாத தேவர்களேயொழிய ராஜசமுகத்தில் அதை அறிவிக்கத்தக்கவர் ஒருவரும் இல்லை என்று அரசமாளிகைக்கு வந்திருந்தோர் கூறினார்கள். (v. 11)

6. இதினிமித்தம் ராஜா மகா கோபமும் உக்கிரமுங்கொண்டு, பாபிலோனில் இருக்கிற எல்லா ஞானிகளையும் கொலைசெய்யும்படி கட்டளையிட்டான் (2:12, 13). ஞானிகளைக் கொலை செய்ய வேண்டுமென்கிற கட்டளை வெளிப்பட்டபோது, தானியேலையும் அவன் தோழரையும் கொலைசெய்யத் தேடினார்கள்.

**B. கர்த்தருடைய வெளிப்பாடு. (2:14-30).**

1. பாபிலோனின் ஞானிகளைக் கொலைசெய்யப் புறப்பட்ட ராஜாவினுடைய தலையாரிகளுக்கு அதிபதியாகிய ஆரியோகோடே தானியேல் யோசனையும் புத்தியுமாய்ப் பேசினான்.

2. பின்பு, தானியேல் ராஜாவினிடத்தில் போய், சொப்பனத்தின் அர்த்தத்தை ராஜாவுக்குக் காண்பிக்கும்படித் தனக்குத் தவணைகொடுக்க விண்ணப்பம்பண்ணினான். (2:14-16)

3. பின்பு தானியேல் தன் வீட்டுக்குப் போய், தானும் தன் தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடேகூட அழியாதபடிக்கு இந்த மறைபொருளைக்குறித்துப் **பரலோகத்தின் தேவனை** நோக்கி இரக்கம் கேட்டு ஆராதனை செய்தான். (2:17-23). இங்கு பரலோகத்தின் தேவனை நோக்கி விண்ணப்பம் செய்தான் என்று முதன்முதலாய்க் கூறப்படுகின்றது. 2:18. இந்த அழைப்பானது சிறையிருப்பில் இருப்பவர்களுக்குப் புதுமையாகக் காணப்படுகின்றது, (நெகே. 1:4). இப்போது எருசலேம் அழிக்கப்பட்டு, ஆலயம் கொழுத்தப்பட்டுள்ளது, கர்த்தர் தற்போது சேரூபீன்கள் மத்தியில் அங்கு இல்லை, எசேக்கியேல் கர்த்தருடைய ஷகீனா மகிமை, பரலோகத்திற்குச் சென்றுவிட்டதைக் கண்டார். (எசேக்கியேல். 9:3; 10:4, 18; 11:23). தற்போது அவர் பரலோகத்தின் தேவனாகவே இருக்கின்றார். தானியேலின் சிறந்த குணம் தனது நண்பர்களுக்கும் அறிவித்து ஜெபிக்கும்படி கூறினார். அன்றிரவே அவர்களுக்கு பதில் கிடைத்தது.

4. அன்று இரவு நேபுகாத்நேச்சார் கண்ட தரிசனத்தை அப்படியே தானியேலுக்குக் கர்த்தர் காண்பித்தார். (2:19).

5. பின்பு தானியேல் பரலோகத்தின் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார். (2:21-23). உடனடியாக ராஜாவிடம் போகாமல். கனவை வெளிப்படுத்திய கர்த்தருக்கு நன்றி சொன்னார் தானியேல்.

6. மறைபொருள்களை வெளிப்படுத்துகிற பரலோகத்திலிருக்கிற தேவன் கடைசி நாட்களில் சம்பவிப்பதை ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்குத் தெரிவித்திருக்கிறார்; உம்முடைய சொப்பனமும் உமது படுக்கையின்மேல் உம்முடைய தலையில் உண்டான தரிசனங்களும் என்னவென்றால்: ராஜாவே, உம்முடைய படுக்கையின்மேல் நீர் படுத்திருக்கையில், இனிமேல் சம்பவிக்கப்போகிறதென்ன என்கிற நினைவுகள் உமக்குள் எழும்பிற்று; அப்பொழுது மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவர் சம்பவிக்கப்போகிறதை உமக்குத் தெரிவித்தார். உயிரோடிருக்கிற எல்லாரைப் பார்க்கிலும் எனக்கு அதிக ஞானம் உண்டென்பதினாலே அல்ல; அர்த்தம் ராஜாவுக்குத் தெரியவரவும், உம்முடைய இருதயத்தின் நினைவுகளை நீர் அறியவும், இந்த மறைபொருள் எனக்கு வெளியாக்கப்பட்டது. (2:28-31). தானியேலின் தாழ்மையை இதில் பார்க்கலாம்.

**C. தானியேலின்பொருள் விளக்கம். (2:30-45).**

1. தரிசனத்தின் காலவரிசை (ராஜா எதனைக்கண்டார்.?) (2:31-35).

a. அவர் ஒரு பெரிய மனித சிலையைக் கண்டார். இது பலவிதமான உலோகங்களால் செய்யப்பட்டிருந்தது.

(1) இதன் தலை பொன்னால் செய்யட்டதாக இருந்தது.

(2) இதன் மார்புப்பகுதியும் கைகளும் வெள்ளியினால் செய்யப்பட்டதாக இருந்தது.

(3) இதன் வயிற்றுப்பகுதியும் தொடைகளும் வெண்கலத்தினால் செய்யப்பட்டிருந்தது.

(4) அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது.




b. நீர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப்போட்டது

c. அப்பொழுது அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடைகாலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப்போலாயிற்று; அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக்கொண்டுபோயிற்று; சிலையை மோதின கல்லோவென்றால், **ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று**. (2:34, 35).


நேபுகாத்நேச்சாரின் கனவு

2. இந்தச் சொர்ப்பனத்தின் இறையியல் விளக்கம். (2:36-45).

a. சிலையானது உலக வல்லரசுகளைப் பிரதிபலிக்கின்றது.

(1) பொன் தலையானது பாபிலோன் ராஜ்ஜியத்தைக் குறிக்கும்.

(2) வெள்ளியினாலான மார்புப் பகுதியும் கைகளும் பெர்சியாவைக்குறிக்கும்.

(3) வெண்கலத்தினாலான வயிறும் தொடைகளும் கிரேக்கத்தைக் குறிக்கும்.

(4) அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணும் ரோமாபுரியைக்குறிக்கும்.

b. உலக வல்லரசுகளின் இறுதிக்காலத்தில், பரலோகத்தின் தேவன், உலகராஜ்ஜியங்களைத் தன்னுடைய கல்லினால் (கிறிஸ்த்துவினால்) அழித்து, நித்திய ராஜ்ஜியத்தை உருவாக்குவார். (2:44, 45).

c. இறுதி ராஜ்ஜியமாகிய ரோமாபுரி, உபத்திரப காலத்தில் பத்துதேசங்களுடன் உயிர்பிழைத்திருக்கும். பழைய ரோமாபுரியின் காலத்தில் அதைக்குறித்த தீர்க்கதரிசனம் இன்னமும் நிறைவேற்றப்படாமல் உள்ளது. இதனை உடைத்து நொறுக்கும் கல்லானது உலகத்திற்குரியது அல்ல. நாலாவது ராஜ்ஜியத்தின் அதிகாரியின் தீர்ப்பினால், அவர் மரணத்தை அனுபவித்தார்.

எருசலேமைக்குறித்து அவர் மலைப்பிரசங்கத்தில் இவ்வாறு கூறியுள்ளார். அவருடைய செய்தியானது, சரித்திர சம்பந்தமாகவும், தீர்க்கதரிசன சம்பந்தமாகவும் நம்பிக்கை கொண்டுள்ளது. பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்" என்று கர்த்தர் கூறினார். (லூக்21:24). நேபுகாத்நேச்சருக்குக் காண்பிக்கப்பட்ட அதே வல்லமைகள் குறித்து தானியேலுடைய தீர்க்கதரிசனத்திலும் தெளிவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. இது நான்கு காட்டு மிருகங்களுக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது. (7:1-27)

(1) பாபிலோன் செட்டைகளுள் சிங்கம்.

(2) பெர்சியா கரடி

(3) கிரேக்கம் செட்டைகளுள்ள சிறுத்தைப் புலி

(4) ரோமாபுரி ஒரு விபரிக்கமுடியாத கொடூரமான விலங்குக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது. அது கெடிதும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இரும்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப்பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது, அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது.

3. **சொப்னத்தின் சுருக்கம்**. (நான்கு ராஜ்ஜியங்களினதும் முக்கிய திகதிகள்.)

**பாபிலோன் (முக்கிய திகதி : கி.மு.626-556 .)**

a. பாபிலோனின் முக்கிய பகுதியானது நிம்ரோத்தினால் அவரது சகாக்களாலும் கட்டப்பட்ட பாபிலோன் கோபுரத்துடன் ஆரம்பிக்கின்றது. (ஆதி. 11:9).

b. கி.மு. 1830 காலப்பகுதியில் முக்கிய நகரமாக மிளிரத் தொடங்கியது.

c. கம்முறாபி (1704-1662 கி.மு.), தன்னுடைய சட்டக் கோவையினால் இதனை உயர்வான நிலைக்குக் கொண்டுவந்தார்

d. கி.மு. 900—722 காலப்பகுதியில் பாபிலோன் அசீரியர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது.

e. ஏறக்குறைய கி.மு. 722இல் மெரோடாக்- பாலதான் என்றழைக்கப்படுகின்ற பாபிலோனியன் அசீரியர்களுக்கு எதிராகப் புரட்சி செய்தான்.

f. கி.மு 626 இல், இன்னுமொரு வல்லமையான மனுசன் நெபோபலசார் தானியேலின் நாட்களில் ஒரு செழிப்பான சாம்ராஜ்ஜியத்தை அமைத்தான்.

g. கி.மு. 612இல் மிகுதியாக இருந்த அசீரியர்களின் காரான் நகரம்மட்டும் இருந்த பயத்தையும் இல்லாதொழித்தான்.

i. கி.மு. 605இல், அவன் தன்னுடைய உலகப் புகழ்பெற்ற மகனாகிய நேபுகாத்நேச்சாரை எகிப்தோடு யுத்தம் செய்வதற்கு அனுப்பினான்.

j. நேபுகாத்நேச்சார் கி.மு. 606—561 வரையுள்ள காலப்பகுதியில் ஆட்சி செய்தார். இவர் உலகத்தில் மிகவும் பலம் வாய்ந்தவராகவும் விவேகமுள்ள இராணுவ அதிகாரியாக, திறமைவாய்ந்த அரசியல்வாதியாக, நல்ல கட்டிடக் கலைஞராகவும் இருந்தார். இவர் ஒரு மீதியானியப் பெண்னைத் திருமணம் செய்திருந்தார். அவளின் பெயர் Amyhia என்பதாகும். அவளுக்காக பாபிலோனின் புகழ்வாய்ந்த தொங்கு பாலத்தையும் அமைத்தார். இது பழைய காலத்தில் ஏழாவது அதிசயமாகவும் கருதப்பட்டது.

k. எருசலேமிற்குத் தப்பி ஓடிய எகிப்தியரைக் தொடர்ந்து சென்று கொலைசெய்தான். அவருடைய எருசலேம் விஜயமானது மிகக் குறுகிய காலமாக இருந்தது, காரணம் அவருடைய தகப்பனாரின் தீடீர் மரணம் காரணமாக அவர் உடனடியாக கி.மு. 605இல் வீடு திரும்ப வேண்டி எற்பட்டது. ஆனால் அவர் மூன்றுமுறை எருசலேமை முற்றுகையிட்டு, பரிசுத்தநகரத்தை நிலமட்டம் வரை எரித்துசாம்பலாக்கினார்.

இந்த சந்தர்பங்களாவன:-

(1) கி.மு.605இல் அவர் நகரத்தை ஆண்டுகொண்டிருந்தார், அவருடைய பொம்மை அரசனாக யோசியாவின் மகனாகிய யோகாக்கீமை (இவருடைய உண்மையான பெயர் எலியாக்கீம் வாசிக்க 2நாளாகமம் 36:4) அனுமதித்திருந்தார். அவர் ஆலயத்தின் பொக்கிசங்களையும், ராஜபரம்பரையில் சிலரையும் பாபிலோனுக்குக் கொண்டு சென்றார். இந்தவகையான வாலிபர்களுள் தானியேலும் அவரது மூன்று நண்பர்களும் அடங்குவார்கள்.(2நாளாகமம். 36:6, 7; தானி. 1:1-3).

(2) கி.மு. 597 இல் அவர் மீண்டும் வந்து ஆலயத்தின் மிகுதிச் செல்வங்களை பாபிலோனுக்குக் கொண்டுசென்றார், அந்நேரத்தில் தீர்கதரிசியாகிய எசேக்கியேலும், யோயாக்கீம் 10,000 இளை ஞர்களும், அதிகாரிகளும் ,இன்னும் முக்கிய அதிகாரிகளையும் பாபிலோனுக்குக் கொண்டு சென்றார். (2இரா. 24:14-16).

(3) கி.மு.586இல் மீண்டும் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவால் நடத்தப்பட்ட கிளர்ச்சிக்காகத் தண்டிப்பதற்காக, எருசலேமிற்கு வந்தார். இந்தக் காலத்தில் அலங்கங்கள் உடைக்கப்பட்டிருந்தன, ஆலயம் அழிக்கப்பட்டிருந்தன, அத்துடன் நகரம் அக்கினியால் எரிக்கப்பட்டிருந்தது. சிதேக்கியாவின் பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள், சிதேக்கியாவின் கண்கள் பிடுங்கப்பட்டன, அத்துடன் அவர் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு கொல் லப்பட்டார்.

l. கி.மு. 562இல் நேபுகாத்நேச்சார் மரணமடைந்தார்.

m. அவருடைய மகனாகியகெட்ட-மெரோதாக் 562இல் சொற்பகாலம் அரசாண்டார். (2இரா. 25:27). அவன் யோகாக்கீனை விடுதலை செய்து, வெளிநாட்டு விருந்தாளிபோல் நடத்தினான்.

n. கி. மு 556இல், நாபோன்டியஸ் என்றழைக்கப்படும் அசீரிய பிரபு, எப்படியோ சிங்காசனத்தைப் பிடித்துக் கொண்டான். சிறிது காலத்திற்குப்பின்பு, அவர் தனது இளைய மகனான பெல்ஷாத்சரிடம் பாபிலோனிய நாட்டைக் கொடுத்தார்.

o. கி.மு. 556இல் மேதியா-பெர்சியா நகரத்தைக் கைப்பற்றும்வரை பெல்ஷத்தார் ஆட்சி செய்தார். (தானி. 5)

**பெர்சியா (கி.மு. 539-331).**

a. கோரேசு மகா ராஜா, வல்லமையான பெர்சிய சாம்ராஜ்ஜத்தை கி.மு. 559இல் ஸ்தாபித்தார். இவர் அதிகமாக பழைய ஏற்பாட்டுப்புத்தகங்களில் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றார். (எஸ்றா1-5; எசாயா. 44:28; 45:1; தானி. 1:21; 6:28; 10:1).

b. அதிக செல்வந்தனாகிய லிதிய அரசனாகிய கொரோசியஸ் என்பவரை கி.மு. 546இல் தோற்கடித்தார்.

c. இவர் 539இல் பாபிலோனைக் கைப்பற்றி பெல்ஷத்தாரைக் கொலைசெய்தார்.

d. கோரேசு சில வருடங்களுக்குப்பின்பு மிகுதியாக இருந்த யூதர்களை எருசலேமிற்கு மீண்டும் செல்வதற்கு அனுமதித்தார்.

e. கி. மு 529இல் இடம் பெற்ற யுத்தத்தில் அவர் மரணமடைந்தார்

f. அவரது மகன் கம்பிசஸ் II (Cambyses II) அரசனானான், அவர் எகிப்தை வெற்றி கொண்டார். இதன்பின்பு அவர் தற்கொலை செய்து கொண்டார். தொடர்ந்து உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டது.

g. தரியு மகாராஜா, (522-486) கம்பிசஸ் IIஐ வெற்றி கொண்டு சீர்குலைந்திருந்த சாம்ராஜ்ஜத்தில் சட்டத்தையும் நியாயத்தையும் கொண்டுவந்தார்.

h. தரியு ராஜா மரதன் என்னும் இடத்தில் 490இல் இடம் பெற்ற கடல் யுத்தத்தில் தோற் கடிக்கப்பட்டார்.

j. அகாஸ்வேரு I (465-423) நெகேமியாவின் மாளிகை ஊழியத்தின் போது ராஜாவாக இருந்தார்.

k. **தரியுIII (335-331)— பெர்சிய சாம்ராஜ்ஜியம்**. மகா அலெக்ஸ்சாந்தரால் அவரது குறுகிய ஆட்சிக்காலத்தில் அழிக்கப்பட்டது.

**கிரேக்கம் ( கி.மு.331-323 ).**

a. கி.மு. 546--- 479 வரை கிரேக்க ராஜ்ஜியம் தொடர்ச்சியாக பெர்சியர்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இது பிளாற்றோவினதும், சலாமிஸ்சினதும் (Salamis and Platoea.) வெற்றி யுத்தத்துடன் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.

b. இந்த யுத்தத்தின் வெற்றிக்குப் பிற்பாடு, கிரேக்கம் பொற் காலத்திற்குள் நுழைந்தது. இதனை அத்தினியன் ஜனநாயகத்தலைவராகிய பெரிக்கில் (461-429 கி.மு.) என்பவர் வழிநடத்தினார், அங்கு வாழ்ந்த குடிமக்களில் சிலர் மிகவும் பெயர்பெற்றவர்களானார்கள்.

(1) கெறொடொற்றஸ் (Herodotus (485-425), சரித்திரத்தின் தந்தை எனப்பட்டார்.

(2) கிப்போகிறேற் Hippocrates (460-370), தற்கால மருத்துவத்தின் தந்தை எனப்பட்டார்.

(3) சோக்கிறட்டீஸ் Socrates (469-399), தத்துவஞானியாவார். b

(4) பிளாற்றோ Plato (427-347) தத்துவஞானியாவார்.

(5) அரிஸ்ரோற்றில் Aristotle (384-322), தத்துவஞானியாவார்.

(6) டிமோஸ்தீனஸ் (Demosthenes) (385-322), இவர் ஒரு சரித்திர சொற்பொழிவாளராவார்.

c. எப்படியோ இவர்களின் பொற்காலம் சிறிதுகாலம்மட்டும் நீடித்தது, கிரேக்கத்தின் முக்கிய இரண்டு நகரங்களில், ஏதேன், ஸ்பாற்றா, அவர்களுக்குள்ளேயே யுத்தங்கள் மூண்டது. அவர்களின் மூன்று யுத்த முரண்பாடுகளும் பெலோபொன்னீசயன் (கி.மு. 459-404). யுத்தம் என்று அழைக்கப்படும்.

d. கி.மு.338இல் கிரேக்கத்தை மசிதோனியா என்னும் இடத்திலிருந்து வந்த ஒரு மனுஷன் தோற்கடித்தான். அவர் இரண்டு வருடங்களுக்குப்பின்பு கி.மு. 336இல் கொலை செய்யப்பட்டார். அவருடைய பெயர் பிலிப்பு மசீடோன்(Philip of Macedon) என்பதாகும். .

e. பிலிப்பு அவருடைய மகனாகிய மகா அலெக்ஸ்சாந்தரால் வெற்றி கொள்ளப்பட்டான். அவர் உலகத்தின் மிகப் பெரிய வெற்றியாளனாகத் திகழ்ந்தார் அப்போது அவருடைய வயது இருப தாகும். அவர் தன்னுடைய தந்தையாரின் கட்டளைக்கிணங்க பெர்சியாவை முற்றுகையிட்டார்.

f. கி.மு.334இல் அவர் கெலேஸ்பொன்ற்(Hellespont) என்ற இடத்தைக் கடந்தார். அது ஆசியா மயினரையும் மத்தியகிழக்கையும் பிரிக்கின்றது

(1) பெர்சியாவை கி.மு.334இல் வெற்றி கொண்டார்.

(2) அவர் தீருவை அழித்தார், எருசலேமைத் தப்பவிட்டார். அத்துடன் எகிப்தியர்களினால் வரவேற் கப்பட்டார். இங்கு அவர் அலக்ஸ்சாந்திரா நகரத்தை ஸ்தாபித்தார்.

(3) கி.மு. 331இல் ஆபெல்லா என்ற இடத்தில் பெர்சியர்களை அழித்து நாசம் செய்தார்.

g. கி.மு. 327இல் இந்தியாவை முற்றுகையிட்டார். இந்தக்காலத்தில் பாபிலோனை மீண்டும் அதன் மகிமையில் கட்டியெழுப்பத் திட்டமிட்டார். ஆனால் அவர் கி.மு. 323இல் இந்தியாவில் தன்னுடைய முப்பத்தியிரண்டாவது வயதில் மரணமடைந்தார்.

h. அவருடைய வல்லமையுள்ள சாம்ராஜ்ஜியம் நான்கு இராணுவ அதிகாரிகளினால் துண்டா டப்பட்டது.

(1) ரெலமி (Ptolemy) இவர் எகிப்தை ஆட்சி செய்தார். இந்த வழியிலேயே கிளியோப்பற்றா வந்தார்.

(2) செலுக்கஸ் (Seleucus)— இவர் சிரியாவை எடுத்துக் கொண்டார். இங்கிருந்துதான் மிகவும் பெயர்பெற்ற (176-163 )அன்ரிக்கோஸ் எபிபனெஸ் IV (Antiochus Epiphanes IV )

(3) கஸான்டர் (Cassander)—இவர் கிரேக்கத்தையும் மசிடீனியாவையும் எடுத்துக் கொண்டார்.

(4) லிசிமார்கஸ் (Lysimachus)—இவர் ஆசியாமைனரை ஆட்சி செய்தார்.

**ரோமாபுரி ( கி.மு.58 முதல் கி.பி. 476 வரை)**

a. ரோமாபுரி கி.மு. 753இல் ஸ்தாபிக்கப்பட்டது. சிசேரோ என்பவர் ரோமாபுரி என்ற பெயர் அதன் ஸ்தாபகராகிய ரேமுலஸ் (Romulus) என்பவருடைய பெயரிலிருந்தே உருவானதாகக் கூறுகின்றார். அவர் முப்பத்தென்பது வருடங்கள் அரசாண்டார், ஆனால் அற்புதவிதமாகக் காணப்படாமற் போனார், இவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

b. கி.மு. 338இல் ரோமாபுரி இத்தாலியின் ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டது.

c. பின்பு கி.மு. 146 இல் நம்பிக்கைத் துரோக யுத்தம் ரோமிற்கும், காத்தேய் என்ற நாடுகளுக்கிடையில் ஏற்பட்டது. இதில் ரோம் வெற்றி கண்டது.

(1) முதலாவது யுத்தம் (கி.மு. 264-241)

(2) இரண்டாவது யுத்தம். (கி.மு. 218-202): இந்த யுத்தத்தில் **கனிபால்** என்பவர் தோன்றுகின்றார். இவர் பெரும் எண்ணிக்கையில் துருப்புக்களைக் கொண்டுசென்று ரோமர்களைப் பயப்பீதியில் உறையவைத்தார். இது கி.மு. 218இல் இடம்பெற்றது. இவர் பெரிய இரண்டு ரோம இராணுவ தொகுதிகளைத் தோற்கடித்தார். இறுதியில் ரோம இராணுவ அதிகாரி சிப்பியோ என்பவர் கனிபாலின் படையைத் கி.மு. 202இல் தோற்கடித்தார். இதன்பிற்பாடு ரோம் அந்த இடத்தின் இராணியாகத் திகழ்ந்தது.

(3) மூன்றாம் யுத்தம். (149-146): காத்தேய் நகரம் பிடிக்கப்பட்டு எரிக்கப்பட்டது.

d. பொம்பி, புகழ்பெற்ற இராணுவ அதிகாரி, பாலஸ்தீனத்தை கி.மு.63இல்வெற்றி கொண்டார்.

e. பின்பு யூலியசீசரால் அவரது பிரபல்யமான காலிக் யுத்தத்தின்போது கி.மு. 51இல் இராஜ்ஜியம் ஒன்றிணைக்கப்பட்டது, சீசர் கி.மு. 44இல் ரோம் நகரில் கொலைசெய்யப்பட்டார்.

f. பின்பு ஒக்ராவியஸ் என்றழைக்கப்படும் அகஸ்ரஸ் சீசரால் ராஜ்ஜியம் பொறுப்பெடுக் கப்பட்டது. பின்பு அவர் யூலிய சீசரைக் கொலைசெய்த இருவராகிய புறூட்டஸ், கசியஸ் ஆகிய இருவரையும் கி.மு. 42 இல் பிலிப்பு நகரில் வைத்து தோற்றடித்தார். கி.மு31இல் ஒக்ராவியஸ் அந்தோனி, கிளியோபற்றா என்பவர்களை அக்கியம் (Actium) என்ற இடத்தில் வைத்துத் தோற்கடித்து, எகிப்தை ரோம மாகாணமாக மாற்றினார். தற்போது ரோம் தன்னுடைய உச்ச வல்லமையிலும், மகிமையிலும் நிறைந்திருந்தது, இந்த ஒக்ராவியஸ் (அகஸ்து) ஆட்சிக்காலத்திலேயே எங்கள் இரட்சகர் பிறந்தார்(லூக்கா. 2:1). அகஸ்து கி.மு. 31இலிருந்து கி.பி.14வரை ஆட்சி செய்தார்.

g. அகஸ்து ராஜா ரிபேறியஸ்சீசரினால் (கி.பி. 14-37) வெற்றிகொள்ளப்பட்டார். யோவான் ஸ்நானகரினதும், இரட்சகர் இயேசுவினதும் ஊழியங்கள் இந்தக்காலத்திலேயே இடம்பெற்றது.

h. (Caligula) கலிகுல்லா (கி.பி. 37-41), சின்ன சப்பாத்து என்று அழைக்கப்பட்டவர், அவர் கொடூரமானவராக இருந்தார், பின்பு அவர் கொலைசெய்யப்பட்டார். அப்போஸ்தல நடபடிக்கைப் புத்தகத்தின் ஆரம்பகாலத்தில் கலிகுல்லா ஆட்சிசெய்தார்

i. கலூடியஸ் (Claudius) (41-54) சொந்த மனைவியினால் நஞ்சூட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டான். பரிசுத்த பவுல் இந்தக்காலத்தில் தன்னுடைய மிஷனரி ஊழியத்தில் ஈடுபட்டிருந்தார்.

j. நீரோ (Nero) (54-68)—பிற்பாடு

a. நீரோவின் எட்டுவருட ஆட்சி மிகக் கொடுமையானதாக இருந்தது. ரோம் நகரை எரித்துவிட்டு, கிறிஸ்தவர்கள்மீது அதன்பழியைச் சுமத்தினார். இவருடைய ஆட்சிக்காலத்தில் பேதுருவும் பவுலும் இரத்த சாட்சிகளாக மரித்தார்கள். கி .பி. 68இல் நீரோ தற்கொலை செய்து கொண்டான்.

k. இதன்பிற்பாடு ரோம இராணுவத்தளபதி வெஸ்பாசியன் (Vespasian) (68-79) ஆட்சியைக் கைப்பற்றினார். அவர் எருசலேமை அழிக்கும்படி தன்னுடைய மகனாகிய தீத்துவுக்கு (Titus) கட்டளையிட்டார். இது கி.பி. 70இல் இடம்பெற்றது.

l. அவருடைய மரணத்திற்குப்பிற்பாடு தீத்து சிங்காசனத்திற்கு வந்தார். அவர் 79—61வரை ஆட்சிசெய்தார்.

m. 81இல் டொமித்தியன் (Domitian) ஆட்சியைப்பிடித்தான். இவர் அப்போஸ்தலர் யோவானை பத்முதீவிற்கு அனுப்பினார். (வெளி. 1:9).

n. ரோம் நகரின் பத்துக்கு மேற்பட்ட ஆட்சியாளர்கள் யாவரும் கிறிஸ்தவர்களை வெறுத்தார்கள்.

o. இறுதியில் 284இல் டயோகிளற்றியான் (Diocletian) ஆட்சிக்கு வந்தார். இவரே விசுவாசிகளைத் துன்பப்படுத்திய மிக மோசமான கடைசிச் சக்கரவத்தியாவார். மேற்கு சாம்ராஜ்ஜத்திலிருந்து கிழக்கு சாம்ராஜ்ஜத்தை டயோகிளற்றியான் பிரித்து மக்கிமியான் என்பவரிடம் ஆட்சி செய்ம்படி கிழக்குப் பகுதியைக் கொடுத்தான். 305இல் அவர் (Diocletian ) இராஜினாமாச் செய்தார்.

p. டயோகிளற்றியன்(Diocletian) ஆட்சியைக் கைவிட்டதும், உடனடியாக அதற்காக இருவர் சண்டையிட்டுக் கொண்டனர்.

ஒருவர் மக்ஸ்சிமியானின் (Maximian) மகனாவார், மற்றவர் கொன்ஸ்ரன்ரைன் (Constantine) ஆவார். யார் ரோம் நகரை ஆட்சி செய்வது என்ற யுத்தம் 312இல் சம்ரசத்திற்கு வந்தது. இது நகரத்திற்கு வெளியேயுள்ள மில்வியான் பாலம் (Milvian Bridge) என்ற இடத்தில் இடம்பெற்றது. இதில் கொன்ஸ்ரன்ரைன் எதிரியைச் மிகச் சிறப்பாக வெற்றி கொண்டான்.

q. 313இல்கொன்ஸரன்ரைன் முக்கியமான அரச பிரகடனத்தைப் பிரகடனப்படுத்தி கிறிஸ்தவத்தை அரச மதமாக நிலைநிறுத்தினார். 325இல் நிக்காயியா சட்டமன்றத்திற்கு தலமைவகித்தார்.

r. கொன்ஸ்ரன்ரைனின் மரணத்திற்குப்பிற்பாடு, அவரது மருமகனாகிய யூலியான் ஆட்சியைப் பொறுப்பெடுத்தார். அவர் கிறிஸ்தவத்தை அகற்றுவதற்கு முயற்சி செய்து தோல்விகண்டார். இது 363இல் இடம்பெற்றது.

s. மகா தியொடர் (Theodosius the Great) (378-395), கிறிஸ்த்தவ வெற்றியாளன், திரும்பவும் ஒருமுறை கிழக்கு,மேற்கு என இரண்டக வகுத்தார். டயோகிளற்றியான் (Diocletian)முன்பு செய்தது போல).

t. இந்தக் காலத்தில் 450-455 ஆட்டில்லா, வண்டல் என்பன இத்தாலியையும் ரோமையும் சூறையாடியது.

u. 476இல் சக்கரவர்த்தி றோமுலஸ் அகஸரஸ் ஆட்சியிலிருந்து கவிழ்க்கப்பட்டார்.

D. **நேபுகாத்நேச்சார் காலில் விழுதல்**. **(2:46-49).**

1. அப்பொழுது ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் முகங்குப்புற விழுந்து, தானியேலை வணங்கி, அவனுக்குக் காணிக்கை செலுத்தவும் தூபங்காட்டவும் கட்டளையிட்டான். (2:46).

2. மெய்யாய் தானியேலின் தேவனே தேவர்களுக்குத் **தேவன்** என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். (2:47).

4. பின்பு ராஜா தானியேலைப் பெரியவனாக்கி, அவனைப் பாபிலோன் மாகாணம் முழுதுக்கும் அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான். (2:48). தானக்கு பதவி கிடைக்கும் போது தன் கூட ஜெபித்த நண்பர்களுக்கும் பதவி வாங்கிக் கொடுத்தார்.

## III. அக்கினிச் சூளை

A. **கர்த்தருடைய கட்டளை**. (3:1-7).

1. ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அறுபதுமுழ உயரமும் ஆறு முழ அகலமுமான ஒரு பொற்சிலையைப் பண்ணுவித்து, பாபிலோன் மாகாணத்திலிருக்கிற தூரா என்னும் சமபூமியிலே நிறுத்தினான். இந்த செயற்பாட்டிற்குப்பின்னால் அனேக திட்டங்கள் இருந்தன.

a. **நேபுகாத்நேச்சாரை மேன்மைப்படுத்தல்**. பொற்சிலையின் தலை நீர்தான் என்று நேபுகாத்நேச்சாரை குறிப்புட்டுக் கூறி அவரை உயர்த்தினான், இந்தச் சிலையின் கொள்ளளவு (90 x 9 x 4 ½)என்பதாகும், இதன் பெறுமதி மிக அதிகமாகும்.

b. இந்த சாம்ராஜ்ஜத்தில் ஒரே மதம் என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருந்தது. இது உலகம் முழுவதிலும் ஒரே மதமாக இருப்பதற்காக மேற் கொள்ளப்படும் மூன்று முயற்சிகளில் இரண்டாவது சம்பவமாகும் . முதலாவது **பாபேல் கோபுரம்** கட்டும் போது மேற் கொள்ளப்பட்டது, கடைசியான முயற்சியாக உபத்திரப காலத்தில் எருசலேமில் இடம்பெறும். (வெளி. 13).

2. சகல சாம்ராஜ்ஜித்திலுமுள்ள முக்கியஸ்தர்கள் யாவரும் தூரா சமவெளிக்கு வரும்படி அழைக்கப்பட்டார்கள். (3:2).

3. பிரதிஸ்டையின் நாள் வந்தபோது சகலவிதமான இசைக்குழுவினரும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தார்கள். (3:5).

4. இசைக் கருவிகள் முழங்கும்போது சகலரும் தழவிழுந்து பொற்சிலையை வணங்கும்படி கட்டளையிடப்பட்டார்கள் (3:4, 5)

5. வணங்கத் தவறுபவர்கள் உடனடியாக எரிகிற அக்கினியில் போடப்பட்டு கொலை செய்யப்ப டுவார்கள். எரிகிற அக்கினிச் சுவாலையை அங்கு வந்தவர்கள் கவனித்துப் பார்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யபட்டனவா என்ற சந்தேகம் இருக்கின்றது. ரோமர்கள் எதிரிகளைச் சிலு

வையில் அறைந்தார்கள், யூதர்கள் கல்லெறிந்து கொண்டார்கள், பாபிலோனியர்கள் எரித்துக் கொன்றார்கள். (எரே. 29:22.) வணங்கு அல்லது எரிக்கப்படுவாய் என்பதே அவர்கள் கோசமாக இருந்தது.

B. **எபிரேயர்களின் நிலை (3:8-23).**

1. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் வணங்காமல் இருந்தார்கள், இதனை உடனடியாக பாபிலோனிய அதிகாரிகள் நேபுகாத்நேச்சாரிடம் அறிவித்துவிட்டார்கள். (3:8-12)

2. இந்த மூன்று வாலிபர்களும் நேபுகாத்நேச்சாரிடம் கொண்டுவரப்பட்டார்கள், அவர் அவர்களை வணங்கும்படி கட்டளையிட்டார். (*தானியேல் சிலை பிரதிஸ்டை செய்யும்பொது அங்கு சமூகமாயிருக்கவில்லை, அவர் பிரதமமந்திரியாக இருந்தபடியால் பல இடங்களுக்கும் பிரயாணப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.*) அந்த மூவரும் ராஜாவை நோக்கி "நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார், விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள். "(3:16-18).


"இங்கு எங்கள் தேவன் எங்களைக் காப்பார் " என்பதே கவனிக்க வேண்டிய முக்கிய விடயமாகும். இந்தச் சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி பாவிக்கப்படுகின்றதை காணக்கூடியதாக உள்ளது. (எபிரே. 7:25; 2:18; யூதா 1:24; எபேசி. 3:20; 2தீமோ 1:12.) யோபுவைப் போலவே இவர்களுடைய சாட்சியும் உள்ளது. (யோபு13:15.)

3. அப்பொழுது நேபுகாத்நேச்சாருக்குக் கடுங்கோபம்மூண்டு: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுக்கு விரோதமாய் அவனுடைய முகம் வேறுபட்டது; சூளையைச் சாதாரணமாய்ச் சூடாக்குவதைப்பார்க்கிலும் ஏழு மடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி உத்தரவுகொடுத்தார். (3:19-21).

4. ராஜாவின் கட்டளை கடுமையாயிருந்தபடியினாலும், சூளை மிகவும் சூடாக்கப்பட்டிருந்தபடியினாலும், அக்கினி ஜுவாலையானது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைத் தூக்கிக்கொண்டுபோன புருஷரைக் கொன்றுபோட்டது. (3:22).
5. மூன்றுபேரும் எரிகிற அக்கினியிலே போடப்பட்டார்கள்.

C. **நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான்.** (3:24-30).

1. அப்பொழுது ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பிரமித்து, தீவிரமாய் எழுந்திருந்து, தன் மந்திரிமார்களை நோக்கி: மூன்று புருஷரை அல்லவோ கட்டுண்டவர்களாக அக்கினியிலே போடுவித்தோம் என்றான்; அவர்கள் ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: ஆம், ராஜாவே என்றார்கள். அதற்கு அவன்: இதோ, நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை; நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான். (3:24-25).



**அக்கினிச் சூளையில் தானியேலின் மூன்று நண்பர்களும். (3:1–30)**

**IV. நிலைகுலைந்த மரம்.**

A. மரமானது (நேபுபாத்நேச்சார்) வீண்பெருமையினால் தன்னைக் கெடுத்துக் கொண்டது. (4:1-27).

1. நேபுகாத்நேச்சார் தான்கண்ட சொப்பனத்தை தானியேலுக்கு கூறினான். (4:1-18)

b. இந்தச் சொர்ப்பனமானது நேபுகாத்நேச்சாருடைய 30-35 வருட காலப்பகுதியில் இடம்பெற்றது, தானியேல் அந்தக் காலத்தில் 48 வயதுடையவனாக இருந்தான். இந்த அக்கினிச்சுவாலை நிகழ்வும் அவருக்கு களைப்பைக் கொடுத்திருந்தது.

c. “இது நல்லது என்று நான் எண்ணினேன்.” (வ. 2), உண்மையாகவே, “இது எனக்கு முன்பாக அழகாக இருக்கின்றது.” என்ன நடந்தது என்பதை சகலரும் அறியவேண்டும என்பதை ராஜா விரும்பினான். (எசாயா. 52:7.)

d. நான் இழைப்பாறுதலில் இருந்தேன் (வ. 4).

e. சமாதானமாயிருந்த காலத்தில் அவர் மிகவும் பயங்கரமான கனவுகண்டான். இதன் முக்கிய அம்சங்களாவன.

(1) இதோ, தேசத்தின் மத்தியிலே மிகவும் உயரமான ஒரு விருட்சத்தைக் கண்டேன். அந்த விருட்சம் வளர்ந்து பலத்து, தேசத்தின் எல்லைபரியந்தமும் காணப்படத்தக்கதாக அதின் உயரம் வானபரியந்தம் எட்டினது. (4:10-12).

(2) நான் படுத்திருக்கையில் என் தலையில் தோன்றின தரிசனங்களைக் காணும்போது, காவலாளனாகிய பரிசுத்தவான் ஒருவன் வானத்திலிருந்து இறங்கக்கண்டேன். அவன் உரத்த சத்தமிட்டு: இந்த விருட்சத்தை வெட்டி, இதின் கொப்புகளைத் தறித்துப்போடுங்கள்; இதின் இலைகளை உதிர்த்து, இதின் கனிகளைச் சிதறடியுங்கள்; இதின் கீழுள்ள மிருகங்களும் இதின் கொப்புகளிலுள்ள பட்சிகளும் போய்விடட்டும் (4:13-16).

(3) உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று

நரஜீவன்கள் அறியும் படிக்குக் காவலாளரின் தீர்ப்பினால் இந்தக் காரியமும் பரிசுத்தவான்களின் மொழியினால் இந்த விசாரணையும் தீர்மானிக்கப்பட்டது என்றான். (4:17).

2. தானியேல் நேபுகாத்நேச்சருக்கு சொர்ப்பனத்தை விளங்கப்படுத்தினான். (4:19-27).

a. சொர்ப்பனத்தை விளங்கப்படுத்தும் போது தானியேல் சில விநாடிகள் திகைத்துப் போனான். (4:19).

b. பிற்பாடு அவர் சொர்ப்பனத்தை விளங்கப்படுத்தினார்.

(1) மரமானது ஒரு மனிதனுக்கு ஒப்பானது, அந்த மனிதன் நேபுகாத்நேச்சராவர். (தானி. 4:22உடன் 2சாமு. 12:7.) வேதாகமத்தில் மரமானது பல பொருள்களைக் குறித்து நிற்கின்றது. ஒரு மரமானது மனிதனைக்குறித்து நிற்கும். (சங். 1:3; எரே. 17:8; எசா. 56:3). இது கிறிஸ்தவ உலகையும் குறித்துநிற்கும். (மத். 13:31, 32). இது நியாயத் தீர்ப்பையும் குறிக்கும். (உபாக. 21:23; கலா. 3:13; எபி. 12:2; 1பேது. 2:24).

(2) பரலோக தூதன் நியாயத்தீர்ப்பை மரத்தின்மீது கூறினான். (4:23உடன் மத். 3:10; லூக். 13:7.)

(3) அழிவானது முற்றுமுழுதானதல்ல, மரமானது இரும்பினாலும் வெண்கலத்தினாலும் கட்டப்படுவதாக. கூறப்பட்டது, பழைய காலத்தில் சரிந்து விழுந்த மரத்தின் அடிப்பகுதி இவ்வாறு விழுந்துபோகாமல் கட்டப்பட்டிருக்கும். இவ்வாறு பாதுகாக்கப்படுவதால் மரமானது மீண்டும் முளைத்து வளரக்கூடியதாக இருக்கும். நேபுகாத்நேச்சார்மீது கர்த்தர் இன்னமும் நோக்கம் வைத்துள்ளார் .

(4) இந்த ராஜா தன்னுடைய பெருமையினால் ஏழுவருடங்கள் பைத்தியமாக இருந்தார். இந்தக் காலம் பைத்தியம் என்பதைவிட, உண்மையில் அவர் இருதயம் மிருக இருதயம் போல மாற்றப்பட்டதால், அவர் மிருகம்போலவே செயற்பட்டார். இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர் தன்னை மிருகம் போலவே எண்ணிக் கொள்ளுவார்.

(5) நேபுகாத்நேச்சார் தன்னுடைய வியாதி கர்த்தரிடமிருந்து வந்தன என்று என்னியபோது அவருடைய வியாதிமாறியது. (4:25உடன் ரோமர். 13:1.)

c. ராஜாவே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக்கொண்டு நீதியைச் செய்து உமது பாவங்களையும், சிறுமையானவர்களுக்கு இரங்கி உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும்; அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம் என்று தானியேல் கூறினான்.(4:27).

d. **பைத்தியத்தின்மூலம் நேபுகாத்நேச்சார் சரிசெய்யப்பட்டார்**. (4:28-37).

1. **நேபுகாத்நேச்சாரின் பெருமை**. (4:28-30).

a. பன்னிரண்டு மாதம் சென்ற பின்பு, ராஜா பாபிலோன் ராஜ்யத்தின் அரண்மனைமேல் உலாவிக் கொண்டிருக்கும்போது: இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத் துக்கென்று, ராஜ்யத்துக்கு அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான்."(4:30). பாபிலோன் நிம்ரோத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது. இவர் நோவாவினுடைய பூட்டனாவார். (ஆதி10:8-10) இந்த நகரம் பல எதிர்ப்புகளின் மத்தியில் நேர்த்தியானதும் வளமானதுமான நகரமாக மாறியது.

இது மிகவும் கம்பீரமாகக் கட்டப்பட்டிருந்தது, இது 15 சதுரமைல் சுற்றளவு கொண்டதாக இருந்தது. இந்த நகரத்தை சூழ்ந்து மூலைவிட்டமாக குறுக்காக ஐபிராத்து பாய்ந்து இந்த நகரமானது 350 டி உயரமான 87அடி கனவளவுள்ள , 35 அடி நீளமுள்ள சுவரைக் கொண்டுள்ளது. சமாந்தரமாக ஆறு பெரிய வாகனங்கள் செலுத்தக் கூடியதாக அமைக்கப்பட்டிருந்தது. சுவர்களைச் சுற்றி 250 காவற் கோபுரங்கள் கட்டப்பட்டிருந்தன. சுவருக்கு வெளிப்புறமாக பெரிய வடிகால் அல்லது அகழி இருந்தது. இது நகரத்தைச் சூழ்ந்திருந்தது. இந்த அகழி ஐபிராத்து நதியின் நீரினால் நிரப்பப் பட்டிருந்தது. இந்த அகழியானது எதிரிகளின் தாக்குதலிருந்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இந்த சுவரை அண்மிப்பதற்கு முன்பாக அகழியைக் கடந்துதான் எதிரிகள் வரவேண்டும். இந்தச் சுவருக்குள் 100 வெண்கலக்கதவுகள் அமைக்கப்பட்டிருந்தது. பாபிலோன் மிகவும் அழகான நகரமாகும். இங்கு அமைக்கப்பட்டிருந்த தொங்கு பாலமானது இன்றும் கூட ஏழு உலக அதிசயங்களில் ஒன்றாக கருதப்படுகின்றது. இவையே இவரது பெருமைக்கு காரணம்.

400 சதுர அடிகளைக் கொண்ட ஒழுங்கமைக்கப்பட்ட அகலமான படிக்கட்டுக்கள் ஒன்றன்மேல் ஒன்றாக, வான பரியந்தம் 350 அடி உயரத்திற்கு அமைக்கப்பட்டது. படிக்கட்டுகள் மூலமாக பார்வையாளர்கள் மேல்தளம் வரை செல்ல முடியும், அவை பத்து அடி அகலமுள்ளது. தூரத்திலிருந்து பார்க்கும்போது தொங்கு பாலமானது மிகவும் கவர்ச்சிகரமான பார்வையைத் தரும். அடித்தளத்திலிருந்து 300அடி அகலமும்,300 அடி உயரமும் கொண்டதாகும் பாபேல் கோபுரத்துடன் இணைந்ததாக. பெரிய மர்தூக் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இது யூபிராத்து பள்ளத்தாக்கில் மிகவும் புகழ்வாய்ந்த தேவாலயமாகும். இதற்குள் பொன்னிலான பெல் சுரூபம் அமைக்கப்பட்டு, அதன் மேசையில் இரண்டு சிறகுகள் அமைக்கப்பட்டிருக்கும். அதன் உச்சியில் பொன்னிலான பொன்னிலான பெல், இஸ்தார் என்பவைகளின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். இரண்டு பொன்னிலான சிங்கங்கள், 40அடி நீளமான பொன்னினாலான மேசை உள்ளது, 15 அடி அகலமான மனித உருவம் சுத்த பொன்னிலானது,18அடி உயரமானது. பாபிலோனானது பொன்நிறைந்த நகரமாகும். (எசாய. 14:4.) இந்த நகரமானது 53 ஆலயங்களும் இஸ்தாருக்கான 180 பலிபீடங்களையும் கொண்டுள்ளது.

2. **நேபுகாத்நேச்சாருக்கான தண்டனை** (4:31-33).

a. அரசனின் வாயிலிருந்து பெருமையின் வார்த்தைகள் வெளிப்பட்ட போதே நியாயத்தீர்ப்பானது வானத்திலிருந்து வந்து அவரை அரண்மனையிலிருந்து கலைத்துப் போட்டது. (4:31).

b. அவருடைய பாவத்திற்கான துக்கமான விளைவு ஏற்பட்டது. “அவன் மனுஷரினின்று தள்ளப்பட்டு, மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தான்; அவனுடைய தலைமயிர் கழுகுகளுடைய இறகுகளைப்போலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப்போலவும் வளருமட்டும் அவன் சரீரம் ஆகாயத்துப் பனியிலே நனைந்தது.” (4:34). இவ்வாறான ஒத்தாசையற்ற சித்தசுகவீனமான காலங்களில் அவருக்கு ஒரு கேடும் ஏற்படவில்லை. இது உண்மையில் கர்த்தரால் கொடுக்கப்பட்ட பாதுகாப்பாகும். அதுமட்டுமல்லாமல் பைத்தியமானவனைக் கொல்லக்கூடாது என்பது பழைய காலத்து நடைமுறையாகும். (1சாமு. 21:10-15.)

3. நேபுகாத்நேச்சார் புகழ். (4:34-37). நேபுகாத்நேச்சார் தன்னைத் தாழ்த்தினான் அப்போது கர்த்தர் அவனுக்கு ஆசீர்வாதங்களைக் கொடுத்தார். பரலோக வரங்களை கவனிப்போமாக.

a. அவருடைய புத்தி அவருக்கு திரும்பி வந்தது

b. அவருடைய ராஜ்யத்திலே அவர் ஸ்திரப்படுத்தப்பட்டார்

c. அவருடைய மகிமையும் முகக்களையும் அவருக்குத் திரும்பி வந்தது

d. அதிக மகத்துவமும் அவருக்குக் கிடைத்தது.

e. அவருடைய மந்திரிமாரும் பிரபுக்களும் அவரைத் தேடிவந்தார்கள்;

f. அவர் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்தினார் ;

g. அவருடைய இரட்சிப்பு நிறைவு பெற்றது. அப்பொழுது அவர் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினார்

**V. பரலோக தேவனின் கரம்**.

**A. குழுநடனம் (5:1).**

1. பெல்ஷாத்தார் ராஜா ஒரு பெரிய விருந்தை ஆயத்தம் செய்தார். பெல்ஷாத்சார் என்னும் ராஜா தன் பிரபுக்களில் ஆயிரம்பேருக்கு ஒரு பெரிய விருந்துசெய்தான். சரித்திரவியலாளர்கள் பெல்ஷாத்தார் பற்றிய சந்தேகம் கொண்டுள்ளார்கள். தெரிந்த சரித்திரப்பதிவுகளின்படி பாபிலோன் கடைசி அரசன் நாபொன்டியஸ் (Nabonidus.) என்பவராகும். ஆனால் அண்மையில் கிடைத்த தரவுகளின்படி பெல்சத்தாரின் ஆட்சி பாபிலோனில் இருந்தது என்பது நிச்சயம் என்று கூறப்பட்டுள்ளது. சேர் கேபேட் றவில்சன் (Sir Herbert Rawlinson) என்ற தொல் பொருள் ஆய்வாளர் பெல்ஷாத்தார் 1854இல் இருந்துள்ளார் என்பதற்கான சான்றுகள் உள்ளதாகக் கூறுகின்றார். அவைகளாவன:-

a. நேபுகாத்நேச்சாரின் ஒரே மகனாகிய அமல்- மர்தூக் Amel-Marduk (ஏவில் மெரொதாக் என்றும் அழைக்கப்பட்டார். (Evil-Merodach) (2இரா. 25:27; எரே. 52:31-34) இவர் 562இல் அவரை வெற்றி கொண்டார். இவர் செற்ப காலம் அரசாட்சி செய்தார்

b. இவர் தன்னுடைய மைத்துணனாகிய நேகால்- சாரேசர் (Nergal-Sharezer) என்பவரால் கொல்லப்பட்டார். (எரே. 39:3, 13) நேகால்- சாரேசர் (Nergal-Sharezer) 560இல் மரணமடைந்தார், பிற்பாடு அவருடைய இளைய மகனாகிய லபாசி- மர்தூக் (Labashi-Marduk) 556இல் ஆட்சியைப் பிடித்தார்.

d. சிறிது காலத்தில் இவர் நாபொன்டியஸ் என்பவரால் கொலை செய்யப்பட்டார்.

நாபொன்டியஸ், நேபுகாத்நேச்சாரின் ஒரு மகளை திருமணம் முடித்திருந்தார். இவர்களுக்கு மகனாக பெல்ஷாத்தார் பிறந்தார். பெல்ஷாத்தார் தன் தகப்பனோடு இணைந்து பாபிலோனை ஆட்சி செய்தார். இந்த விடயங்கள் தானியேல் 5ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன. பெல்ஷாத்தார் தானியேலை மூன்றாவது ஆளுநராக உயர்த்தியிருந்தார். (5:7, 16, 29).

2. இந்தக் கொண்டாட்டக் காலமானது ஒரு ஆரோக்கியமற்றதாக இருந்தது, அதாவது பாபிலோன், மேதியா, பெர்சியா என்பவர்களின் தாக்குதல் காலமாக சில சமயம் இருந்திருக்கலாம்.

**B. மனம் புண்படுதல் (5:2-4).**

1. பெல்ஷாத்தார் மேசையில் அமர்ந்து குடித்துக் கொண்டிருந்தார், திடீரென அவருக்கு அசுத்த எண்ணம் உண்டாயிற்று, எருசலேம் ஆலயத்தில் தன்னுடைய பேரனாகிய நேபுகாத்நேச்சரால் எடுத்துவரப்பட்ட பொன், வெள்ளிப் பாத்திரங்கள் நினைவிற்கு வந்தன. அவற்றைக் கொண்டுவந்து விருந்தாளிகள் மது அருந்துவதற்குக் கொடுக்கும்படியும் அவர்கள் அதில் மது அருந்தும் போது, பாபிலோனியத் தெய்வங்களைப் புகழும்படியும் கட்டளையிட்டான்.

2. இந்த புனித பாத்திரங்கள் சாலொமோனால் செய்யப்பட்டவையாகும். (1இரா 7:48-51), எசேக்கியாவால் காட்டப்பட்டு, (2இரா20:13), நேபுகாத்நேச்சரால் கொண்டு செல்லப் பட்டவையாகும். (2நாள.36:10).

**C. சுவர். (5:5, 6)**

1. குடிபோதையில் யாவரும் இருக்கும் அந்நேரத்திலே மனுஷ கைவிரல்கள் தோன்றி, விளக்குக்கு எதிராக அரண்மனையின் சாந்து பூசப்பட்ட சுவரிலே எழுதிற்று; எழுதின அந்தக் கையுறுப்பை ராஜா கண்டான். அப்பொழுது ராஜாவின் முகம் வேறுபட்டது; அவனுடைய நினைவுகள் அவனைக் கலங்கப்பண்ணினது; அவனுடைய இடுப்பின் கட்டுகள் தளர்ந்தது, அவனுடைய முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டது." (5:6).
2. ராஜா உரத்த சத்தமிட்டார்; தனக்கு உதவிகள் தேவை என்பதற்காக சத்தமிட்டார் எகிப்தியர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக கர்த்தரால் அனுப்பப்பட்ட பொல்லாத கொள்ளை நோய்களைக் கண்ட போது , மந்திரவாதிகள் பார்வோனை நோக்கி: இது தேவனுடைய விரல் என்றார்கள். (யாத். 8:19). இங்கும் தேவனுடைய விரல் இவருக்கு எதிராகச் செயற்படுகின்றது.




**சுவரில் எழுதப்பட்ட எழுத்து (5:1–30)**

**D. அழைப்பு (5:7-23).**

1. இந்த அவசர தேவையின் போது, பெல்ஷாத்தார் சாத்திரிகள் பக்கம் திரும்பினார், மனித இருதயம் இவ்வாறு மாறுபட்டது. அமெரிக்க நாடுகளில் மட்டும் 15 மில்லியன் மாணவர்கள் சோதிடத்தை விசுவாசிக்கின்றார்கள்.

2. சரித்திரம் பிரயோசனமற்றது என்பதை பெல்ஷாத்தார் உணர்ந்து கொண்டார். சோதிடம் பார்ப்பதனால் இருதயத்தின் காயத்தை ஆற்ற முடியாது. அவர்களின் ஞானவான்களால் எந்தப்பிரயோசனமும் இல்லாது போயிற்று.

3. இறுதியில் அவருடைய தாயாரின் (பாட்டியாரின் ஒரு வேளை நேபுகாத்நேச்சரின் மனைவியாக இருக்கலாம்) (Nitocris) ஆலோசனைப்படி பெல்சத்தார் தானியேலை அழைத்தான் (5:10-15).

4. இந்த எழுத்துக்களை வெளிப்படுத்தினால், மூன்றாவது அதிகாரியாக பதவி உயர்த்தப்படுவான் என்று தானியேலுக்கு அரசன் கூறினான். (5:16).

5. அப்படிச் செய்வதற்கு தானியேல் சம்மதித்தான், ஆனால் அவர் தரும் பதவி உயர்வை வேண்டாம் என்று கூறினான்.

a. நேபுகாத்நேச்சார், சித்தசுயாதீனமற்ற நிலையிலிருந்து குணமடைந்த பிற்பாடு, அவர் ஒரு நல்ல உதாரணத்தை தன்னுடைய பேரனாகிய பெல்ஷாத்தாருக்கு விட்டுச் சென்றுள்ளார் (5:18-21).

b. இவையாவற்றையும் பெல்ஷாத்தார் அறிந்திருந்தபின்பும், இவையெல்லாவற்றையும் வெறுத்து தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினான். (5:22, 23). (நீதி. 29:1.)

**E. அவசரமாக எழுதப்பட்ட குறிப்பு 5:24-29.**

1. இந்த எழுத்துக்கள் மூன்றுவிடயங்களை கர்த்தரிடமிருந்து பெல்சத்தாருக்கு கூறுகின்றது.

a. "**மெனே**,**மெனே**" — தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார்.

b. "**தெக்கேல்,**"— நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய் என்பதாகும்.

c. "**பெரேஸ்**"— உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது என்றும் அர்த்தமாம்.

**F. வீழ்ச்சி (5:30, 31).**

1. கிரேக்க சரித்திரவியலாளர் கெறோடொற்றஸ் (Herodotus) கூறுகின்றாவது, பாபிலோனியன் இராணுவமானது முதலாவதாக வடக்குப்பக்கமாக பெர்சியாவின் இராணுவத்தை எதிர்பதற்கு முனைந்தது, ஆனால் விரைவில் பாபிலோனியச் சுவருக்கு அப்பால் தள்ளப்பட்டார்கள். கோரேசு , யூபிராத்து நதியை திசைதிருப்புவதில் முயற்சிகளை மேற் கொண்டார், அவர் வெட்டிய நீர்த்தேக்கத்திற்கு நீரை அனுப்புவதற்கு முயற்சி செய்தார். மற்றய சரித்திரவியலாளரான எக்சோபோன் (Xenophon,) கூறுகின்றதாவது, பாபிலோனியர்கள் தங்கள் பண்டிகையின் போது குடித்துவெறித்து கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தபோது எதிரி படைகள் அவர்களைத் தாக்கி அழிப்பதில் ஈடுபட்டார்கள்.

2. அன்று இரவிலேயே பெல்ஷாத்சார் கொல்லப்பட்டார், நகரம் 62 வயதுடைய மேதிய தரியுவினால் ஆட்சிசெய்யப்பட்டது.

3. 200 வருடங்களுக்கு முன்பாகவே திர்க்கதரிசி ஏசாயாவினால் பாபிலோன் வீழ்ச்சியடையும் என்று முன்னுரைக்கப்பட்டது. (எசா. 21:1-10.)

## VI. சிங்கமும் சிங்க இருதயமும்..

### A. கெட்ட திட்டம். (6:1-9)

1. மேதிய, தரியு, தன்னுடைய புதிய ராஜ்ஜியத்தைப் பபிலோனைப் பலப்படுத்த தொடங்கினான். அவர் தன்னுடைய ராஜ்ஜியத்தை 129 மாகாணங்களாக வகுத்தார், அவற்றை ஒவ்வொரு ஆளுநருக்குக் கீழ் கொண்டுவந்தார். இந்த ஆளுநர்கள் யாவரும் மூன்று பிரதமர்களுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும், அவர்களுள் தானியேலும் ஒருவராவார். தரியுராஜாவின் அடையாளம் குறித்து சரித்திரவியலாளர்கள் சில கேள்விகளை எழுப்பியுள்ளார்கள். மூன்று முக்கிய விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ள.

a. வித்தியாசமான பெயரில் கோரேசு செயற்பட்டார்.

b. இவர் கோரேசுடைய மகன் கம்பைசஸ் ( Cambyses)

c. இவர் பெர்சிய ராஜா கோரேசுவினால் நகரத்தை ஆளும்படி நியமிக்கப்பட்ட பிரதம உதவியாளன் **குபாறு** (Gubaru)எனப்படவார்.

**மூன்றாவது பார்வை தர்க்கரீதியானதாகும்**.

2. தானியேல் தற்போது 80 வயதுள்ளவனாக இருக்கின்றார், ஆனாலும் தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால் அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான். (6:3).

3. அப்பொழுது பிரதானிகளும் தேசாதிபதிகளும் ராஜ்யத்தின் விசாரிப்பிலே தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள்; (6:4)

4. ஆனாலும் ஒரு முகாந்தரத்தையும் குற்றத்தையும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது;அதனால் மதவிடயத்தில் தானியேலைக் குற்றப்படுத்த முனைந்தார்கள் (6:5).

5. தரியுராஜா முப்பதுநாள் சட்டத்தில் கையொப்பம் வைக்கும்படி அவருடைய பிரதானிகளால் வஞ்சிக்கப்பட்டார். (6:6-9).

### B. முழங்காலில் நின்று ஜெபிக்கும் மனிதன். (6:10-20).

1. தன்னில் குறைகாண்பதற்கு முயற்சி செய்கின்றார்கள் என்பதை தானியேல் அறிந்திருந்தார். ஆனாலும் ஜெபவீரனாகிய தானியேல் முன்பு கர்த்தரைத் துதித்தது போலவே துதித்து ஜெபம் செய்தார்.

**நாம் கவனிக்க வேண்டியது**

a. அவர் தன் அறையின் யன்னல்களை திறந்துவைத்தார். அதனை மூடிவைப்பது கோழைத் தனமானது. அதைத் திறந்துவைப்பதானது அசட்டுத் துணிவுள்ளதாகும்.

b. ஒருநாளில் மூன்றுமுறை காலையிலும், மதியத்திலும், மாலையிலும் அவர் ஜெபம் செய்தார்.

c. அவர் முழங்கால்படியிட்டார், இதுவே வேதாகம முறையாகும்.


d. அவர் எருசலேமை நோக்கிப் பார்த்தார். இந்த நெறிமுறையை சாலொமோன் ஆலயப் பிரதிஷ்டையின் போது வெளியிட்டார். (1இரா. 8:44-48; 2நாளா. 6:36-39.)

2. இந்த வஞ்சகமுள்ள பிரதானிகள் தானியேல் மூன்றுவேளைகளும் தவறாது தன்னுடைய தேவனை நோக்கி ஜெபம் செய்வதைக்குறித்து தரியுவிடம் முறையிட்டார்கள். தரியு இவரைத் தப்புவிப்பதற்கான ஏதாவது சட்டத்தில் இடமிருக்கின்றதா எனதேடிப்பார்த்தும் எந்தவழியும் கிடைக்கவில்லை. (6:11-15).

3. தானியேல் கைது செய்யப்பட்டு, மனிதர்களைச் சாப்பிடும் சிங்கக்கூட்டினுள் எறியப்பட்டார். பிசாசானவன் சிங்கத்திற்கு ஒப்பாக வேதாகமத்தில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. (சங்கீதம்10:9; 57:4; 2தீமே. 4:17; 1பேதுரு. 5:8; தானி. 6:16.)

4. தன் முத்திரை மோதிரத்தினால் சிங்கத்தின் குகையின்மேல் வைக்கப்பட்ட கல்லை முத்திரையிட்ட பிற்பாடு தரியு வீட்டிற்குத்திரும்பி நித்திரையில்லாத இரவைக் கழித்தான். (6:17, 18). கிறிஸ்துவின் கல்லறைக்கு முத்திரையிட்டதையும் ஒப்பிடலாம்

5. காலமே கிழக்கு வெளுக்கும்போது ராஜா எழுந்திருந்து, சிங்கங்களின் கெபிக்குத் தீவிரமாய்ப் போனான். ராஜா கெபியின் கிட்டவந்தபோது, துயரசத்தமாய்த் தானியேலைக் கூப்பிட்டு: தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று தானியேலைக் கேட்டான். (6:20).



**தானியேல் சிங்கங்களின் கூட்டில் (6:1–28)**

**C. பரலோக கீதமுழக்கம் (6:21-28).**

1. சிங்கங்களின் கூட்டிலிருந்து தெளிவான ஒரு சத்தம் கேட்கிறது: ராஜாவே நீர் என்றும் வாழ்க. சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்; அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்; ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிகேடு செய்ததில்லை என்றான். (6:21, 22).

பேதுரும் பவுலும் இந்த பயங்கரமான சம்பவத்தை மனதில்வைத்து இவ்வாறு கூறியுள்ளார்கள், : விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், (எபி. 11:33). ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள். (1பேது. 4:19). தானியேலின் தூதர்களை அக்கினி ஜூவாலைக்குள் காப்பாற்றிய அதே தூதன் சிங்கங்களின் வாயையும் கட்டி தானியேலைக் காப்பாற்றினார்.

2. இதில் ராஜாவின் பிரதிபலிப்பு இரண்டுமடங்காக இருந்தது. அவர் பைத்தியமாகவும், சந்தோஷமாகவும் இருந்தார்.!

a. அவர் தானியேல் காப்பாற்றப்பட்டதற்காக அதிகம் சந்தேஷமடைந்தார். தானியேலின் தேவனே ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்; அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும். என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டுமென்று என்னாலே தீர்மானம்பண்ணப்படுகிறது என்று கட்டளையிட்டார். (6:23, 25-27)

b. தானியேலின்மேல் குற்றஞ்சாற்றின மனுஷரையோவென்றால், ராஜா கொண்டு வரச்சொன்னான்; அவர்களையும் அவர்கள் குமாரரையும் அவர்கள் மனைவிகளையும் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள்; அவர்கள் கெபியின் அடியிலே சேருமுன்னே சிங்கங்கள் அவர்கள் மேல் பாய்ந்து, அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப்போட்டது. (6:24). (எசேக். 18:20 உபக. 24:16; 2இரா. 14:6; 2நாளா. 25:4; எரேமி. 31:29, 30.)

| **சிறையிருப்பு நிலை** | |
|---|---|
| தானியேல், எசேக்கியேல். | |
| **1. தெய்வீக உணவு** | |
| உறுதியான மனநிலை: ராஜாவின் உணவைச் சாப்பிடுவதில்லை.<br>சிபார்சு செய்யப்படல்: பத்துநாள்களுக்கான உணவு பரிமாறப்பட்டது.<br>வெகுமதி: தானியேலும் நண்பர்களும் பத்துமடங்கு பலமாக இருந்தார்கள். | |
| **2. ஒரு சிலையும் கல்லும்** | |
| தலை: பொன்னினாலானது<br>உலகவல்லமை: பாபிலோன் 606-539<br>மார்பும் கைகளும்: வெள்ளியினாலானவை<br>உலகவல்லமை: பெர்சியா 539–331<br>வயிறும் தொடைகளும்: வெண்கலத்தினாலானவை<br>உலகவல்லமை: கிரேக்கம் 331–323<br>கால்களும் பாதங்களும்: இரும்பும் கழிமண்ணும்.<br>உலகவல்லமை ரோம் 322 கி.மு-கி.பி476 எதிர்காலத்தில்<br>பெரிய கல்லினால் சிலை உடைக்கப்பட்டது, அது கிறிஸ்த்துவுக்கு ஒப்பானது . | |
| பாபிலோனியர்களின்ஏமாற்றம்: ராஜாவின் சொப்பனத்தை மொழிபெயர்க்க முடியாதவர்கள் கொலை செய்யப்படுவார்கள்.<br>கர்த்தருடைய வெளிப்படுத்தல்: கர்த்தர் தானியேலுக்கு செப்பனத்தை வெளிப்படுத்தினார்.<br>தீர்க்கதரிசியின் வெளிப்படுத்தல்: தானியேல் சொப்பனத்தை விளங்கப்படுத்தல்.<br>அரசன் காலில் விழுந்து வணங்குதல்: மொழிபெயர்ப்பைக் கேட்டுக் கொண்டிருந்தபோது, நேபுகாத்நேச்சார் பணிந்துகுனிந்து தானியேலை வணங்கினான். | |
| தானியேல் 7இல் நான்கு தேசங்கள் விபரிக்கப்படுகின்றன, ஆனால் பரலோக பார்வையில் அவைகள் நான்கு மிருகங்களைப் போல பார்க்கப்படுகின்றன | |
| உலகவல்லமை | விளக்கம் |
| பாபிலோன் | சிங்கம் |
| பெர்சியா | கரடி |
| கிரேக்கம் | சிவிங்கி |
| ரோம் | பயங்கரமான மிருகம். |

| |
|---|
| **3. ஒரு அக்கினிச் சூளை** |
| ராஜாவின் கட்டளை.: எல்லா தலைவர்களும் 90 அடி பொற்சிலையை வீழ்ந்து வணங்கினார்கள். இதற்கான காரணங்கள்.<br>1. தன்னுடைய மனிதனை உயர்த்துவதற்கு<br>2. தன்னுடைய ராஜ்ஜியத்தைப் பலப்படுத்துவதற்கு.<br>3.எபிரேயர்களின் தனி நிலை: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோக்.,என்பவர்கள் சிலையை வணங்க மறுத்தபடியால் எரியும் அ க்கினிச் சூளையில் எறியப்பட்டார்கள்<br>கர்த்தருடைய சொந்தமனிதன்.: கிறிஸ்த்து தாமே அவர்களுடன் இணைந்து அவர்களை பாதுகாத்தார். |
| **4. ஒரு மரத்தின் நிலைகுலைவு** |
| மரம் (நேபுகாத்நேச்சார்) பாவத்தினால் தன்னைக் களங்கப்படுத்திக் கொண்டார்.<br>1. நேபுகாத்நேச்சார் தானியேலுக்கு தன்னுடைய சொப்பனத்தை எடுத்துரைத்தான்.<br>2. தானியேல், நேபுகாத்நேச்சாருக்கு சொப்பனத்தை எடுத்துரைத்தான்.<br>மரம் (நேபுகாத்நேச்சார்) பைத்தியமாக்கப்பட்டதனால் சீர் செய்யப்பட்டது<br>1. நேபுகாத்நேச்சாரின் பெருமை<br>2. நேபுகாத்நேச்சாருக்கான தண்டனை<br>3. நேபுகாத்நேச்சார் புகழ்து பாடுதல். |
| **5. பரலோக தேவனின் கரம்**. |
| களிப்பாட்டம். தானி 5:1<br>மனவேதனை. தானி 5:2–4<br>சுவர் . தானி. 5:5, 6<br>அழைப்பு . தானி. 5:7–23<br>எழுத்துக்கள். தானி. 5:24–29<br>வீழ்ச்சி . தானி 5:30, 31 |
| **6. சிங்கமும் சிங்க இருதயமும்**. |
| கெட்ட திட்டம். (6:1–9)<br>நாளாந்த ஜெபஜீவியத்தில் பிழை கண்டுபிடித்தல்.<br>முழங்காலில் நின்று ஜெபிக்கும் மனிதன். (6:10–20)<br>தானியேல் தொடர்ந்து ஜெபித்தபடியால் சிங்கக் குகையில் தள்ளப்படல்.<br>தேவ விடுதலை(6:21–28)<br>தானியேல் கர்த்தருடைய தூதனால் சிங்கங்களின் வாயைக் கட்டி விடுவிக்கப்பட்டான். |

**VII. கர்த்தர் இல்லாத ராஜ்ஜியங்களும் கர்த்தர் உள்ள ராஜ்ஜியங்களும்**.

A. நேபுகாத்நேச்சர் பாபிலோனின் சிங்கமாகும் (7:4)—அத்துடன் பொன் தலையுமாகும் 2:32.

1. இந்தத் தரிசனத்தில் தானியேல் நான்கு கர்த்தர் இல்லாத ராஜ்ஜியங்களைக் காண்கின்றார், அத்துடன் இறுதியாக கர்த்தருடைய ராஜ்ஜியத்தையும் நேபுகாத்நேச்சார் இரண்டாம் அதிகாரத்தில் காண்கின்றார். ஆனால் இதனை அவர் முழுவதும் வித்தியாசமான முறையில் காண்கின்றார். அவர் தங்கம், வெள்ளி என்பன போன்று கண்டார், ஆனால் கர்த்தர் மிருகங்களுக்கு ஒப்பாக அவற்றைப் பார்க்கின்றார்.

2. தானியேல் வல்லமையான சமுத்திரத்தின் மீது, பெரிய புயல் எல்லாத்திசைகளிலிருந்தும் வீசுவதைப் பார்க்கின்றார். (வெளி. 7:2; எபே. 2:2; 6:12.) இந்த காற்றுக்கள் சாத்தானின் வல்லமையைக் குறிக்கின்றது.

3. முதலாவது மிருகம் நேபுகாத்நேச்சாரையும் பாபிலோனையும் குறிக்கின்றது.

a. இது சிங்கததைப் போன்றது. (எரே. 4:7; 49:19; 50:17, 43, 44.)

b. இதற்கு கழுகுகளின் செட்டைகள் இருந்தன. (எரே. 48:40; 49:22; புல. 4:19; எசே. 17:3; ஆப. 1:8.) நேபுகாத்நேச்சர் இந்த செட்டைகளை காகேமிஸில் 605இல் இடம்பெற்ற யுத்தத்தில் காண்பித்தார்.

c. அந்த சிறகுகள் உடைக்கப்பட்டன. தானியேல் 4:33 (நேபுகாத்நேச்சாரின் செட்டைகள்), தானியேல் 5:31 (பாபிலோனின் செட்டைகள்).

**B. கோரேசு பெர்சியாவின் கரடியாகும்**. **(7:5)—** இது வெள்ளியிலான நெஞ்சும் கைகளுமாகும். 2:32

1. இந்த கரடியானது ஒருபக்கம் சார்ந்திருந்தது, இது மேதியா, பெர்சியா என்பவர்களின் இணைவில், பெர்சியர்கள் வல்லமையுள்ளவர்களாக இருந்தார்கள் என்பதைக் குறிப்பிடுகின்றது.

2. இதன் வாயில் மூன்று எலும்புத் துண்டுகள் இருந்தன, பெர்சியா வெற்றி கொண்ட மூன்று தேசங்களாகிய பாபிலோன், எகிப்து, லிடியா என்பவைகளைக் குறிக்கின்றது.

3. இது அதிக இறைச்சியைத் தின்றுவிட்டது. பெர்சிய ராஜாவாகிய எறெக்ஸ் (Xerxes) என்பவர் எகிப்திற்குமட்டும் 1.½ மில்லியன் மனிதர்களையும் 300 கப்பல்களை அனுப்பியிருந்தான்.

C. அலெக்ஸ்சாந்தர் ஒட்டகச் சிவிங்கி (7:6)—வெண்கலத்திலான வயிறும் தொடைகளும். 2:32.

1. இது ஒட்டகச் சிவிங்கியைப் போலானது. அலெக்சாந்தர் விரைவாகப் பிரயாணம் செய்து அதிக தேசங்களைக் கைப்பற்றிக் கொண்டார். சரித்திரத்தில் வேறுயாரும் இப்படிச் செய்யவில்லை.

2. இதற்கு நான்கு தலைகள் இருந்தன. அவர் 32 வயதில் மரணமடைந்த பிற்பாடு, அவருடைய ராஜ்ஜியம் அவருடை நான்கு தளபதிகளிடம் சென்றன.

D. சிறிய கொம்பு ரோம கெட்ட மிருகம். (7:7, 8)—இதற்குச் சிங்கத்தின் கால்கள் இருந்தன, அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது. 2:33.

1. இந்த கெட்ட மிருகம் கி.பி. 476இல் இழைப்பாறியது. இது தன்னுடைய குகையில் செயலற்றிருந்தது.

2. இது உபத்திரப காலத்தில் மீண்டும் பத்துதேசங்கள் என்ற வகையில் விழித்துக் கொள்ளும், அவர் வேறு யாருமில்லை அந்திக் கிறிஸ்துவேயாகும். அவர் பாவ மனுஷன் என்று அழைக்கப்படுவான். 2தெச 2:3, 4, மற்றும் கடல் மிருகம் என்றும் அழைக்கப்படுவான். வெளிப்படுத்தல்13:1.

3. அவன் சக்திபெற்றவனாக வரும் போது இந்த பத்து தேசங்களில் மூன்றை வெற்றி கொள்ளுவான். (7:8).

4. மகா உபத்திரப காலமாகிய 3.1/2 வருடங்களில் உலகில் ஒரே ஆட்சி காணப்படும். (7:25). (வெளி13:5; மத். :21.)

5. அவன் பூமியின்மீது அளவுக்கதிகமான இரத்தத்தைச் சிந்துவான். (7:7, 19).

6. கர்த்தருடைய பரிசுத்தவான்களை ஒடுக்குவார்கள். (இஸ்ரவேல்) (7:25). (வெளி. 12:13.)

7. அவன் காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; (7:25).

8. அவன் உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசுவான் (7:25). (வெளி. 13:5, 6.)

9. அவன் வரப் போகிற கிறிஸ்துவினால் தோற்கடிக்கப்பட்டு, கந்தகம் எரியும் நரக அக்கினியிலே தள்ளப்படுவான். (7:11).

**E. இயேசுக்கிறிஸ்து, ராஜாதி ராஜனாக இருப்பார். (7:13, 14)— அவர் நொறுக்கிப் போடும் கல்லாகவும் இருப்பார். 2:34.**

1. அவர் வானத்து மேகங்கள் மீது வந்து, தனக்குரிய உலக சுதந்திரங்களை எடுத்துக் கொள்ளுவார். (7:13). இந்த வருகையின் போது எங்கள் கர்த்தரானவர் இஸ்ரவேலர்களின் பிரதான ஆசாரியர்களை எச்சரிப்பார், (மாற். 14:61, 62.)

2. பிதாவானவரால் அவருக்கு உலகத்திற்குரியதும், நித்தியத்திற்குரியதுமான சிங்காசனம் கொடுக்கப்பட்டுள்ளது, (7:9, 13, 14). இந்த சிங்காசனம் பிதாவினால் கொடுக்கப்படும் என்று வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. (வெளி 1:9-18.) தாவீதுவும் (சங். 2:6-9) கபிரியேல் தூதனும் இதனை முன்னறிவித்துள்ளார்கள். (லூக்கா. 1:32)

3. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடியதைத் தானியேல் கண்டார். (7:10). இது நியாயத்தீர்ப்பின் பகுதியாகும். (எபி12:29; எசா 66:15, 16; 2தெச. 1:8) வெள்ளைச் சிங்காசனத்தின் நியாயத்தீர்ப்பு முடிவடைந்த பிற்பாடு, இது ஆசீர்வாத நதியாக மாறும். (வெளி: 22:1.)

4. கோடாகோடி தூதர்கள் அவருக்கு முன்பாக நின்றார்கள்; (7:10). (இதே போல துதர்கள் வெளிப்படுத்தல் புத்தகத்திலும் கூறப்பட்டுள்ளது. (வெளி. 5:11; சங். 68:17; எபி. 12:22.)

5. நியாயத்தீர்ப்பின் புத்தகம் திறக்கப்படும், கோடாகோடி மனிதர்கள் நியாயத்தீர்ப்புக்காக காத்திருப்பார்கள். (7:10). (வெளி. 20:11-15.)

## 7. கர்த்தருடைய ராஜ்ஜியமும், கர்த்தர் இல்லாத ராஜ்ஜியமும்.

“அப்பொழுது வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின. …(7:3)

“இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்;” (7:13)

**ராஜ்ஜியம், சின்னம், பிரதிநிதி**

| | | |
|---|---|---|
| பாபிலோன் 7:4 (2:37, 38) | சிங்கம் | நேபுகாத்நேச்சார். |
| பெர்சியா 7:5 (2:39) | கரடி | கோரேசு 7:6 (2:39) |
| கிரேக்கம் 7:6 (2:39) | ஒட்டகச்சிவிங்கி | மகா அலெக்சாந்தர் |
| ரோம் 7:7, 8 (2:40–43 | மோசமான மிருகம் பயங்கர பல்லுகளுடன். | |

சரித்திரம்.: ரோம சீஷர்கள் தீர்க்கதரிசனம் : அந்திக்கிறிஸ்து

நித்திய ராஜ்ஜியம் 7:9–14 (2:44, 45) மனுஷகுமாரன் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து

**7. கர்த்தருடைய ராஜ்ஜியமும், கர்த்தர் இல்லாத ராஜ்ஜியமும்.** அப்பொழுது

| வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின.(7:3) "இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்;" (7:13) | | |
|---|---|---|
| **ராஜ்ஜியம்**, | **சின்னம்**, | **பிரதிநிதி** |
| பாபிலோன்7:4 (2:37, 38) | சிங்கம் | நேபுகாத்நேச்சார் |
| பெர்சியா 7:5 (2:39) | கரடி | கோரேசு |
| கிரேக்கம் 7:6 (2:39) | ஒட்டகச் சிலிங்கி | மகா அலெக்ஸ்சாந்தர் |
| ரோம் 7:7, 8 (2:40–43) | மோசமான மிருகம் பயங்கரப் பல்லுகளுடன். | சரித்திரம்: ரோம சீஷர்கள். தீர்க்கதரிசனம் அந்திக்கிறிஸ்த்து |
| நித்திய ராஜ்ஜியம் 7:9–14 (2:44, 45) | மனுஷகுமாரன் | கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்த்து |

8. **புறஜாதிகளின் கொம்புகள்**.

A. இரண்டுசெம்மறியாட்டுக்கடா கொம்புகளுடையது (பெர்சியா, தரியு IIIஇனால் பிரதிநிதித்துவப்படுகின்றார்.) (8:1-4).

1. இந்த தரிசனத்தில் தானியேல் தான் சூசான் கோட்டையில் நிற்பதாகக் காண்கின்றார். இது பாபிலோனிலிருந்து கிழக்குப்பக்கமாக 120 மைலுக்கு அப்பாலுள்ள நகரமாகும். இது பெர்சியன் வளைகுடாவின் வடக்குப் பக்கத்தில் உள்ளது.

2. அவர் வெற்றி கொள்ளும் செம்மறியாட்டுக்கடாவைப் பார்க்கின்றார். அது கிழக்குப் பக்கமாகவிருந்து வருகின்றது, இது மேற்குப்பக்கமாகத்தள்ளியது, வடக்குப்பக்கமாகத் தள்ளியது, அத்துடன் தெற்குப்பக்கமாகவும் தள்ளியது. இதுபெர்சியாவின் வெற்றியை பிரதிபலிக்கின்றது, மேற்கு என்பது சிரியா, வடக்கு என்பது ஆமீனியா, தெற்கு என்பது எகிப்து என்றுபொருள்படும்.

**B. ஒரு கொம்புள்ள ஆடு (எகிப்தை மகா அலெக்ஸ்சாந்தர் பிரதிநிதிப்படுத்தினார் .) (8:5-8).**

1. தானியேல் பார்த்துக் கொண்டிருக்கையில் மேற்கிலிருந்து வந்த வெள்ளாட்டுக்கடா, செம்மறியாட்டுக்கடாவை முட்டி மோதிற்று, அதை நிலத்தில் விழத் தள்ளிற்று, அதைத் துண்டாக கிழித்தது.
2. கிழக்கு நாடுகள் மேலைநாடுகள். இந்த வெள்ளாட்டினதும், செம்மறியாட்டினதும் தீர்க்கதரிசனங்கள் நுணுக்கமாக ஆராயப்படவேண்டியவையாகும். இரண்டாம், மூன்றாம் உலக சாம்ராஜ்ஜியங்களுக்கிடையே எற்பட்ட முரண்பாடுகள், கிழக்கு நாடுகளுக்கும், மேற்கு நாடுகளுக்கும் ஏற்பட்ட முரண்பாடுகள், ஆசியாவுக்கும் ஐரோப்பாவிற்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள் யாவற்றையும் மிக அவதானமாக ஆராயவேண்டும். சரித்திர வரைபடங்களின் மூலமாக ஒருகொம்புடைய வெள்ளாடு பழைய கிரேக்க இராணுவத்தைப் பிரதிநிதிப்படுத்துகின்றது என்று கண்டுள்ளார்கள்.

3. வெள்ளாடானது அதிக மூர்க்கமான கோபத்துடன் செம்மறியாட்டிற்கு எதிராக புறப்பட்டது. கிரேக்கத்திற்குள் நுழைந்த பெர்சியர்களை வெறுத்து நொறுக்கினார் மகா அலெக்ஸ்சாந்தர். மூன்று வித்தியாசமான முறைகளில் தாக்குதலை மேற் கொண்டார்.

a. 334இல் கிரானிக்கஸ்ஸிலும், (Granicus)

b. 333 இல் இஸ்ஸூசிலும் (Issus)

c. 331இல்ஆபெல்லாவிலும் (Arbela)

சந்தோசமான சரித்திரக்குறிப்புக்களை இங்கு காணலாம். யுட்டுவா என்ற இஸ்ரவேலின் பிரதான ஆசாரியரால் எருசலேமிற்கு வெளியே அலெக்சாந்தரைச் சந்தித்தார் என்று யோசபாஸ் கூறியுள்ளார். இஸ்ரவேல் பிரதான ஆசாரியர் மிகவும் அழகான உடையணிந்திருந்தார், அவர் கிரேக்க வெற்றியாளனுக்கு எபிரேயிய தீர்க்கதரிசியாகிய தானியேல் பெயரைக் கூறி 225 வருடங்களுக்கு முன்பு பெர்சியர்களின் தோல்வியைக் முன்னறிவித்தார் என்று கூறினான். பிற்பாடு தானியேல் 8ம் அதிகாரத்தை வாசிக்கத் தொடங்கினார். அப்போது அலெக்சாந்தர் அவரை விழுந்து வணங்கினார்.

4. இதன் கொம்புகள் சடுதியாகத் திடீரென முறிந்தது, அதனை நான்கு பகுதியாக பிரிக்கப்பட்டதை தானியேல் கண்டார். அலெக்சாந்தர் தன்னுடை 32 வயதில் குடிவெறிக் கொண்டாட்ட நேரத்தில் பாபிலோனில் 323இல் மரணமடைந்தார். அவருடைய ராஜ்ஜியமானது நான்கு இராணுவத்தளபதிகளால் பங்கிடப்பட்டது. அவையாவன.

a. எகிப்தின் தெற்குப்பகுதியை ரொலமி (Ptolemy) எடுத்துக் கொண்டார்.

b. கிழக்குப்பகுதியாகிய சிரியாவை செலூக்கஸ் (Seleucus) எடுத்துக் கொண்டார்.

c. மேற்குப்பகுதியாகிய கிரேக்கத்தை கசாண்டர் (Cassander) எடுத்துக் கொண்டார்.

d. வடக்குப்பகுதியாகிய ஆசியாமைனரை லிசிமார்க்கஸ் (Lysimachus) எடுத்துக் கொண்டார்.

C. இரண்டு சிறிய கொம்புள்ள ராஜாக்கள்t சிரியாவும் மீண்டும் உயிர்பெற்ற ரோம சாம்ராஜ்ஜியமும், அது அன்ரியோக்ஸ் எபிபானேஸ் மற்றும் அந்திக்கிறிஸ்த்துவும் பிரதிநிதிப் படுத்துவார்கள்.) 8:9-27.

இவையாவற்றையும் பிரதான தூதன் கபிரியேல், தானியேலுக்கு விளங்கப்படுத்தினார். . இதிலேதான் அவரைப்பற்றி வேதாகமத்தில் முதலில் கூறப்பட்டுள்ளது. (தானி9:21; லூக். 1:19, 26.)

1. **சரித்திரத்தின்படி – சிறிய கொம்பு— அன்ரியோக்ஸ் எபிபானேஸ்** (Antiochus Epiphanes.)

a. இவர் சிரிய நாட்டைச் சேர்ந்தவராவார்.

b. இவர் கி.மு. 175 இலிருந்து கி.மு 164 வரை ஆட்சி செய்தார்.

c. இவர் செமிற்றிக்(Semitic) இனத்திற்கு எதிரானவர். இவர் எருசலேமைத் தாக்கி 40,000 மக்களை மூன்று நாட்களுக்குள் கொலை செய்தவர். அத்துடன், அதேயளவானவர்களை அடிமைகளாக விற்றுப் போட்டவராவார். கி.மு. 171 இல் எருசலேம் ஆலயத்திற்கு எதிராகவும் செயற்பட்டவர்.

d. கி.மு 168இல் ஆலயத்தை அசுத்தப்படுத்தும் செற்பாடுகள் குறைவடைந்து வந்தது. அந்நாட்களில் சுரூபவணக்கக்காரர்கள், பெரிய பன்றியை யூதர்களின் ஆலய பலிபீடத்தில் பலியாகப்படைத்தார்கள், அவர், பிற்பாடு அந்த மாமிசத்தை ஆசாரியர்களை உண்ணும்படி வற்புறுத்தினான், இறுதியில் தங்கத்தினாலான குத்துவிளத்கையும், அப்பத்து மேசையையும், துபகலசத்தையும் மற்றைய பாத்திரங்களையும் எடுத்துச் சென்றான். அத்துடன்

நியாயப்பிரமாணத்தின் புத்தகங்களையும் அழித்துவிட்டான். அவர்களுடைய **யூப்பிற்றர்** தெய்வத்தையும் மகாபரிசுத்த ஸ்தலத்தில் வைத்தார்கள் இதனை யூதர்கள் "**பாழாக்குகிற அருவருப்பு**" என்று அழைக்கப்படும். மத்தேயு: 24:15 எதிர்காலத்தில் இவ்வாறான உரு நிகழ்வு இடம்பெறும்.

e. அவர்களால் மகாபரிசுத்த ஸ்தலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட யூப்பிற்றர் தெய்வத்திற்கு பலிகள் செலுத்தும்படி வற்புறுத்தப்பட்டார்கள். ஆனால் மோடின் என்று அழைக்கப்படும் சிறிய யூத கிராமம் ஒன்று எருசலேமிற்கு வடமேற்குப் பக்கமாக பதினேழுமைல் தொலைவில் இருந்தது. அங்கு ஒரு யூத ஆசாரியர் இருந்தார் இவர் பெயர் மத்தாத்தியஸ் என்பதாகும். அவருக்கு ஐந்து ஆண்பிள்ளைகள் இருந்தார்கள். இந்த துணிகரமான, வயதான மனிதன் அந்திக்கோஸினால் (Antiochus) நிறுவப்பட்ட சுரூபத்தை வணங்க மறுத்ததோடல்லாமல், துணிகரமாக அரசனுடை மதசார்பான ஸ்தானாதிபதியையும் கொலை செய்துவிட்டார். இதனால் யூதர்களுக்கு எதிரான யூத்தம் மூண்டது. அவருடைய ஒரு மகனுடைய பெயர் யூதாஸ் (Judas )அவர் மக்காபி (Maccabee)என்று அழைக்கப்பட்டார். அதன் பொருள் சுத்தியல் என்பதாகும். இந்த சிரியர்களுக்கு எதிராக இந்த யூதாஸ் வெற்றிகரமாக இராணுவத்தை வழிநடத்தி வந்தார். இவர்களின் துணிகரமாக செயற்பாடுகள் குறித்து முறைப்படி ஏற்றுக் கொள்ளப்படாத புத்தகங்களான (Apocrypha books) 1ம், 2ம் மக்காபீ புத்தகங்களில் காணமுடியும். கி.மு. 165 இல் யூதர்களின் தேசப்பற்றாளர்கள் அந்திக்யொசினால் பாழாக்கப்பட்ட ஆலயத்தைச் சுத்தப்படுத்தி, மீண்டும் பிரதிஸ்டை செய்தார்கள். இந்த நாள் பிற்பாடு யூதர்களுக்கு விடுமுறைநாளாகவும், பிரதிஸ்டைப்பண்டிகை நாளாகவும் கொண்டாடப்படுகின்றது. (யோவான். 10:22).

**குறிப்பு:** 8:14 இல் 2300 நாள்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நாட்கள் 171.இல. தொடங்கி 165இல் முடிவடைகின்றது. 7ம் நாள் திருச்சபையின் ஸ்தாபகர் இயேசுக்கிறிஸ்த்து 1844இல் குறிப்பிட்ட தினத்தில் மீண்டும் வருகின்றார் என்று குறிப்பிட்டிருந்தர் அதனால். அவர் வழிதவறிவிட்டார்

f. (Antiochus )அந்தியேகு 164 இல் பாபிலோனில் நடந்த யுத்தத்தில் மரணமடைந்தார்.

2. தீர்க்கதரிசனமாக கூறப்பட்ட சிறிய கொம்பு –அந்திக்கிறிஸ்த்துவாகும். எதிர்கால எதிரியாகிய இவன் முன்னோடியாக அதிக வேலைகளைச் செய்வான். இவர்கள் இருவருக்குமிடையிலான வித்தியாசத்தைக் கவனிப்போம்.

a. இருவரும் அதிகமாக வெற்றியடைவார்கள். (தானி8:9; வெளி. 13:4).

b. இருவரும் தங்களைப் பெரிதாகக் காட்டிக் கொள்வார்கள். (தானி. 8:11; வெளி. 13:15).

c. இருவரும் ஏமாற்றுவதில் வீரராக இருப்பார்கள். (தானி. 7:25; 2தெச. 2:10).

d. இருவரும் பொய்யான சமாதானத்தைக் காண்பிப்பார்கள். (தானி. 8:25; 1தெச5:2, 3).

e. இருவரும் இஸ்ரவேலை வெறுத்து உபத்திரபப் படுத்துவார்கள். (தானி. 8:25; வெளி. 12:13).

f. இருவரும் ஆலயத்தை அசுத்தப்படுத்துவார்கள். (தானி. 8:11; மத். 24:15).

g. இருவரும் சாத்தானை உற்சாகப்படுத்துவார்கள். (தானி. 8:24; வெளி. 13:2).

h. இருவரும் கிழக்கில் ஏழுவருடங்கள் சுறுசுறுப்பாகச் செயற்படுவார்கள். (தானி. 8:14; 9:27).

i. இருவரும் கர்த்தருக்கு எதிராகப் பேசுவார்கள். (தானி. 8:25).

j. இருவரும் கர்த்தரால் முழுமையாக அழிக்கப்படுவார்கள். (தானி. 8:25) (வெளி. 19:19, 20).

## 9. எழுபது ஏழுகளின் இரகசியம்.

A. தானியேல் – தீர்க்கதரிசியின் ஜெபம். (9:1-19).

1. இது வேதாகமத்திலுள்ள சிறப்பான அதிகாரமாகும். இதற்கு இரண்டு ஆய்வுப் பொருள்கள் உண்டு. தீர்க்கதரிசனமும், கோபமும். இந்தக்காலத்தில் தானியேலுக்கு எண்பத்தைந்து வயதாக இருந்தது.

2. தானியேல் எரேமியாவின் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார். எருசலேம் எழுபது வருடங்களுக்கு பாழாக்கப்பட்டிருக்கும் (எரேமியா. 25:11; 29:10.)

3. பின்பு அவர் நீண்ட நேரம் தொடர்ச்சியாக ஜெபம் செய்தார். தன்னுடைய சொந்தப்பாவத்தைக் குறித்தும், சிறையிருப்புக்கு கொண்டு சென்ற இஸ்ரவேல் மக்களின் பாவத்தைக்குறித்தும் முன்னுரிமை கொடுத்து ஜெபம் செய்தார். அவரது ஜெபம் உபவசத்துடனும், சாம்பலுடனும், சாக்கு உடுப்புடனும் இடம் பெற்றது, (9:1-3). இந்த மூன்று செயற்பாடுகளும், சம்பிரதாயமாக பாவத்தைக்குறித்து உண்மையாக இருதயத்தில் உணர்ந்து ஜெபம் செய்தலாகும் ( எஸ்றா8:23; நெகே. 9:1; எஸ்தர். 4:1, 3, 16; யோபு 2:12; யோனா 3:5, 6.)

4. அவர் கர்த்தருக்கு உடன்படிக்கையை ஞாபகப்படுத்தினார். (9:4), ஆபிரகாமின் உடன்படிக்கையை ஞாபகப்படுத்தினார். அதில் பாலஸ்தினமானது என்றென்றைக்கும் இஸ்ரவேலருக்குரியது என்று வாக்குப் பண்ணப்பட்டிருந்த்து. (ஆதி. 12:7; 13:14, 15-17; 15:7; 18-21; 17:8), அடுத்ததாக தாவீதின் உடன்படிக்கை, இது இஸ்ரவேலர்களுக்கு நித்திய ராஜாவையும், ராஜ்ஜியத்தையும் தருவதாக உத்தரவாதம் கொடுக்கப்பட்டுள்ளது. (2நாள. 13:5; 2சாமு. 7:12-16; 23:5).

5. இஸ்ரவேலர்களின் சுருபவணக்கத்தினால், கர்த்தருடைய கிருபையும் நன்மையும் மாறாக இருப்பதைப் பார்க்கிறார். (9:5, 7, 8, 9).

6. அவர் யூதாவின் ராஜாவை குறிப்பிடுகின்றார். (9:8). இரண்டுபேர் பாபிலோனியச் சிறையிருப்பில் யூதர்களுடன் கொண்டு செல்லப்பட்டவர்களாகும்.

7. கர்த்தர் கீழ்ப்படியாமையையும், அதற்காகக் கொடுக்கப்படும் தண்டனையையும் குறித்து எச்சரித்திருந்ததை அவர்கள் பெற்றுக் கொள்ளத் தகுதியானவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டார். (9:12-14). (லேவி. 26.)

8. அவர் ஜெபத்தை முடிக்கும் போது தன்னையும் மக்களையும் கர்த்தருடைய கிருபைக்குள் முழுமையாக ஒப்புக் கொடுத்தார். “என் தேவனே, உம்முடைய செவியைச் சாய்த்துக் கேட்டருளும்; உம்முடைய கண்களைத் திறந்து, எங்கள் பாழிடங்களையும், உமது நாமம் தரிக்கப்பட்டிருக்கிற நகரத்தையும் பார்த்தருளும்; நாங்கள் எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம்.”(9:18).

**B. கபிரியேல்** –தேவதூதனுடைய தீர்க்கதரிசனம். (9:20-27). தானியேல் ஜெபித்துக் கொண்டிருந்த போதும், கர்த்தர் தன்னுடைய தேவதூதனாகிய கபிரியேலை அவருக்கு ஊழியம் செய்யும்படியும், முழு உலகுக்குமான மிகவும் வியப்படையத்தக்கதும், மிகவும் ஆழமுடையதுமானதுமான தீர்க்கதரிசனத்தை விளங்கப்படுத்துவதற்காகவும் அனுப்பிவைத்தார். தன்னுடைய பிள்ளைகள் ஜெபம் செய்யும்போது கர்த்தர் விடை கொடுக்கின்றார் என்பதற்கான உதாரணம் ஆதியாகமம் 24:15 உள்ளது. .

குறிப்பு: இந்த தேவதூதனின் செய்தியானது 9:24-27இல் உள்ளது. அவற்றை கீழ்காணப்படும் ஆறு கேள்விகளுக்கு விடையளிப்பதன் மூலம் விளங்கிக் கொள்ளுவோம்.

1. இந்த தீர்க்கதரிசனம் யாருக்கு கூறப்பட்டுள்ளது.? இது இஸ்ரவேலர்களுக்கு கூறப்பட்டுள்ளது.

2. "ஏழு கிழமைகள் seventy weeks" என்பதிலிருந்து விளங்கிக் கொள்ளப்படுவது யாது? இதைக் குறித்து Dr. Alfred Martin என்பவர் மூடி வேதாகம கழகத்திலிருந்து கீழ்கண்ட ஒத்தாசையுள்ள வார்த்தைகளைக் கூறியுள்ளார்கள்: "எழுபது கிழமை என்பது, எழுபது ஏழுகள் என்று பொருள்படும் என்று கூறுகின்றார்.' எழுபது என்றால் என்ன என்பதை முதலில் விளங்கிக் கொள்ளல் வேண்டும். சிலர் எழுபது என்றால் " எந்த எழுபது" என்று கேட்கலாம்.?

ஜெபத்திற்குப் பதிலாக அந்த தரிசனம் அவருக்குக் கொடுக்கப்பட்டது, எரேமியா புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும் போது, கர்த்தர் எழுபது வருடங்களை எருசலேம் பாழாய்க்கிடப்பதற்கு அனுமதிக்கிறார் என்பதை வாசித்தார். (தானி. 9:2). இது அவருக்கு கிடைத்த ஒரு செய்தியாகும். தானியேலுக்கு அது உறுதியாகக் கிடைத்த ஒரு செய்தியாகும் "ஆம், எழுபதுவருட சிறையிருப்பை கர்த்தர் அனுமதிக்கின்றார், ஆனால் அவர் முழுச்சரித்திரத்தையும் இஸ்ரவேலர் எழுபது ஏழுவருடங்கள் நிறைவாக கழியவேண்டும் என்பதாக காண்பிக்கப்பட்டது. மேலும் இதனை நாம்விளங்கிக் கொள்வதற்கு, எழுபது கிழமைகள் என்பது, இஸ்ரவேலர்கள் தங்கள் நாட்க்கட்டியில் ஒரு கிழமை என்பது ஏழுநாட்கள் என்று மட்டும் குறிப்பிடவில்லை. (யாத். 23:12) ஆனால் ஒரு கிழமை என்பது ஏழுவருடங்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (லேவி. 25:3, 4, 8-10; ஆதி. 29:27, 28). இன்னுமொருவிதமாய்க் கூறுவதாயின், கர்த்தர் தானியேலுக்கு கூறுவது இஸ்ரவேலர்களுடன் 490 வருடங்களுக்கு தொடர்ந்து செயற்பட்டு நித்திய நீதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்பதாகும். இந்த குறிப்பிட்ட விடயத்தை நாம் சுருக்கமாகப் பார்ப்போமாகில். :

a. ஒவ்வொரு ஏழாம் வருடத்திலும் இஸ்ரவேலர்களின் நிலங்கள் பயிர் செய்யப்படாமல் தரிசாக விடப்படல் வேண்டும். (லேவி. 25:1-4).

b. இந்த கட்டளை மீறப்பட்டது. (லேவி. 26:33-35; எரே. 34:12-22; 2நாளா. 36:21).

c. இறுதியாக 490 வருடங்களுக்கு மேலாக. தேசமானது எழுபது வருடங்களுக்கு ஓய்வாக இருக்கும்.

d. தானியேல் இவை யாவற்றையும் அறிந்திருந்தும் ஜெபம் செய்து கொண்டிருக்கின்றார். எழுபது வருடச் சிறையிருப்பானது, எழுபது ஏழு வருடங்களாக மாற்றப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொண்டார்.

e. கபிரியேல் இவருக்கு இன்மொரு காலத்தைக் கூறுகின்றார், இது 490 வருடங்களுக்கு ஒப்பானது, அது நாடுகடத்தலின் அனுபவத்தில் ஏற்படக் கூடியதாகும்.

3. எப்போது எழுபது வருடம் ஆரம்பிக்கின்றது. இது எருசலேம் மதில் கட்டப்படுவதற்கான கட்டளை பிறந்த நாள்முதல் ஆரம்பிக்கின்றது. நெகேமியாவின் இரண்டு அதிகாரங்கள் இதைக்குறித்து அறிவிக்கின்றது, இந்தக்கட்டளை **Artaxerxes' accession** இருபதாவது வருடத்தின் போது ஆரம்பிக்கின்றது. 14, 445 கி.பி இதனை *Encyclopedia Britannica என்ற புத்தகம் மார்ச்சு 14, கி.மு 445. என்று கூறுகின்றது.*

4. இந்த எழுபது வாரங்கள் தீர்க்கதரிசனத்தில் என்னென்ன நிகழ்வுகள் சம்பவிக்கும், அவை எழிதில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்குமா?

a. **முதலாவது காலம்**. ஏழுவாரங்கள் (நாற்பத்தொன்பது வருடங்கள்), கி.மு. 445 ல் இருந்து கி.மு. 396 வரையாகும். இந்த காலத்தின் முக்கிய நிகழ்வாக எருசலேமின் பாதைகள் கட்டப்படுதலும், சுவர்கள் கட்டப்படுதலுமாகும். இது குழப்பமான காலப்பகுதியிலும் கட்டப்படும். இது கூறப்பட்டவாறு நிறைவேறியது. (நெகே. 2-6.)

b. **இரண்டாவது காலப்பகுதி.** அறுபத்தியிரண்டு வாரங்கள். (434 வருடங்கள்), கி.மு. 396ல் இருந்து கி. பி. 30 வரையாகும். இந்தக் காலத்தின் இறுதிப்பகுதியில் மேசியா சிலுவையில் அறையப்படுவார். (மத்.27; மாற்.15; லூக். 23; யோவ. 19.) இந்த இரண்டு காலப்பகுதிகளையும் இணைத்துப் பார்க்கும் போது 49+434=483 வருடங்களாகும். பிரித்தானிய வேதாகம வல்லுனரான சேர் றோபேட் அண்டெர்சன் (Sir Robert Anderson) என்பவர் 360 நாட்களாகக் கணக்கிட்டுப் பார்த்தார். (இது வேதாகம வருடமாகும் நாட்களாகும் ஆதி. 7:11, 24; 8:3, 4). அறுபத்தொன்பது வாரம் ( அல்லது 483 வருடங்கள்) 173,880 நாள்களாகும்.இவ்வாறு கணக்கிடும் போது கி.பி. 32இல் வரும் ஏபிறில் மாதத்தில் எருசலேமிற்குள் கிறிஸ்த்துவின் வெற்றிப்பவனி இடம் பெற்றதாக Robert Anderson அவர்களின் கணக்கு கூறுகின்றது. நிச்சயமாக தானியேலின் தீர்க்கதரிசனம் கர்த்தரின் செயற்பாட்டில் நினைவில் இருந்திருக்கும், அதனால் அவர் "லூக்கா19:42 உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது". ஆனால் இந்த நாட்களில் பரிசேயல் இயேசுவைக் கொல்லுவதற்குச் சதி செய்தார்கள் (லூக்கா 19:47). ஆனால் தானியேல் ஐந்தரை நூற்றாண்டுகளுக்குமுன்பாக மேசியாவின் ஏற்றுக் கொள்ளப்படுதலையும், தள்ளப்படுதலையும் குறித்துச் சரியாகக் கூறியுள்ளார்.

c. **மூன்றாம் காலப்பகுதி** :- ஒரு வாரம். (ஏழு வருடங்கள்) இது இரகசிய வருகையிலிருந்து ஆயிரம்வருட அரசாட்சி தொடங்கும் வரையிலான காலப்பகுதியாகும். இந்தக் காலப்பகுதியின் தொடக்கத்தில், அந்திக்கிறிஸ்த்து இஸ்ரவேலர்களுடன் உடன்படிக்கை ஏற்படுத்துவான், அத்துடன் அவனுடைய பயங்கரமான இரத்தம் சிந்துதலைத் தொடங்குவான். இந்த வாரத்தின் கடைசிப்பகுதியில், (அதாவது எழுபதாவது வாரத்தில்) இரகசிய வருகையிலிருந்து (ஆயிரம் வருட ஆட்சித் தொடக்கம் வரை. ) உண்மையான மேசியா தன்னுடைய ஆயிரம் வருட ஆட்சியைத் தொடங்குவார்.

5. இந்த எழுபது வாரங்களும் தொடர்ச்சியாகச் செயற்படுமா? இந்த 490 வருடங்களும் பூரணமாக எந்தவித இடையூறுமின்றி தொடர்ச்சியாகச் செயற்படுமா? அல்லது இடை வெளிகள் ஏற்படுமா? இந்த வாரங்கள் தொடர்ச்சியாகச் செயற்படுவதில்லை என்று இறையியல் வல்லுனர்கள் கூறுகின்றார்கள். ஆனால் அறுபத்தொன்பதாவது வாரத்திற்கும், எழுபதாவது வாரத்திற்குமிடையில் 2000 வருட இடை வெளி காணப்படும் என்றும் கூறுகின்றார்கள். ஆனால் கடைசி நேரத்தில் சில வேளைகளில் சில நிமிடங்கள் நீடிக்கப்படுவதற்குமான சந்தர்ப்பங்களும் எற்படக் கூடும் என்று கருதுகின்றார்கள்.

6. கர்த்தருடைய இந்தத் திட்டத்தில் இடைவெளி ஏற்படுமென்று வேதாகமத்தில் எங்காவது கூறப்பட்டுள்ளதா? உண்மையில் இது காணப்படுகின்றது.

a. ஏசாயா 9:6, 7. இங்கு நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் என்பது பெத்தலகேமைக்குறிப்பிடுகின்றது, கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும் என்பது ஆயிரம்வருட அரசாட்சியைக் குறிக்கின்றது

b. சகரியா 9:9, 10. ஒன்பதாவது வசனம் வெற்றிப்பவனியைக்குறிக்கின்றது. **சகரியா9:9** சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்.

ஆனால் 10ம் வசனம் ஆயிரம்வருட அரசாட்சி பற்றிக்கூறுகின்றது. சகரியா 9:10 எப்பிராயீமினின்று இரதங்களையும் எருசலேமினின்று குதிரைகளையும் அற்றுப்போகப்பண்ணுவேன், யுத்தவில்லும் இல்லாமற்போகும்; அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார்; அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கிப் பூமியின் எல்லைகள்பரியந்தமும் செல்லும்.

7. எழுபது வாரம் நிறைவு செய்வதற்கு ஆறுவிடயங்கள் இடம் பெறுதல் வேண்டும்.

a. மனிதர்களின் பாவங்களுக்கும் மீறுதல்களுக்கும் முடிவு கொண்டுவரப்படல் வேண்டும், விஷேடமாக இஸ்ரவேல் தேசத்தார்களுடையவையாகும். (அப்3:13-16; 28:25-31; எசேக். 37:23; ரோம. 11:26, 27).

b. பாவச் செயல்களுக்கான ஒப்புரவு, இணக்கம் ஏற்படுத்தப்படல் வேண்டும். இது கல்வாரியில் மேசியா சிலுவையில் அறைப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டது. . (2கொரி. 5:18-20).

c. உண்மையான திர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்பட்டதல்.

d. இந்த உலகத்தை சாத்தானால் சரியாக ஆளமுடியாது என்பதை நிரூபித்துக் காண்பித்தல்.

e. அந்திக்கிறிஸ்த்துவையும் அவனது உடன் வேலையாட்களையும் அழித்தல். (வெளி. 19:20; 20:10).

f. ஆயிரம் வருட அரசாட்சி அமைக்கப்படல். (சங். 45:3-7; எசா. 11:3-5; எரே. 23:3-8).

8. எழுபது வாரங்களில் (490வருடங்கள்). இதில் மூன்று காலப்பகுதிகள் அடங்கியுள்ளன.

a. **முதலாவது காலம்**:- (நாற்பத்தொன்பது வருடங்கள் அல்லது ஏழு வாரங்கள்.) கி.மு.445 தொடக்கம் கி.மு 396 வரை

b. இரண்டாம் காலப்பகுதி —(434 வருடங்கள் அல்லது அறுபத்தியிரண்டு வாரங்கள்.) கி.மு.396 இருந்து . கி.பி. 32வரை.

c. நேரம் கடந்த காலப்பகுதி. (இது எறக்குறைய இருபது நூற்றாண்டுகள் கடந்து விட்டன). அறுபத்தொன்பதாவது வாரத்திற்கும், எழுபதாவது வாரத்திற்குமிடையில் காணப்படும் இடை வெளி வெளிப்படுத்தப்படவில்லை. அதனால் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் இதனைக் கூறவில்லை. (எபேசி. 3:1-10; 1பேது. 1:10-12.)

d. **மூன்றாம் காலப்பகுதி** (ஏழுவருடங்கள் அல்லது ஒரு வாரம் )இரகசிய வருகை தொடங்கி ஆயிரம் வருட அரசாட்சி ஆரம்பமாகும் காலம் வரையான காலப்பகுதிகளாகும்.

9. எழுபது வார காலப்பகுதியில் காணப்படும் இரண்டு தனிநபர்கள்.

a. மேசியாவாகிய இயேசுக்கிறிஸ்த்து. .

b. வரப் போகும் இளவரசன்—அந்திக்கிறிஸ்த்து .

| **9. எழுபது ஏழுகளின் இரகசியங்கள்.** | | |
|---|---|---|
| **தானியேல் : ஒரு தீர்க்கதரிசியின் ஜெபம்** | | |
| ஜெபத்தின் நேரம் | பெர்சியாவின் முதலாம் வருட ஆட்சியின் போது கி. மு. 538 (9:2) | |
| ஜெபத்திற்கான சந்தர்ப்பங்கள். | தானியேல் எரேமியாவின் தீர்க்கதரிசனங்களை விளங்கிக் கொள்ளுதல். (9:2) | |
| ஜெபத்திற்கான அடிப்படைக் காரணம். | கர்த்தருடைய வாக்குறுதிகள். (9:4) கர்த்தருடைய இரக்கம். (9:9, 18) | |
| ஜெபநேரத்தில் அறிக்கையிடல். | "நாங்கள் பாவம் செய்துள்ளோம். " (9:5,18, 9, 11, 15, 16) | |
| ஜெபத்தில் வேண்டுதல் செய்தல் | கர்த்தர் அவர்களை எகிப்திலிருந்து கொண்டுவந்தது போல பாபிலோனிலிருந்தும் கொண்டுவந்தார். (9:15) அவர்களைக் கர்த்தர் மன்னிக்கிறார். (9:19) எருசலேமில் மீண்டும் ஆலயம் கட்டப்படுவதற்கு கர்த்தர் அனுமதிக்கின்றார். (9:16, 17) | |
| ஜெபத்திற்கான விடை | "நான் ஜெபத்தில் இருக்கும் போது காபிரியேல் என்னைத் தொட்டார்." (9:21). | |
| **காபிரியேல் : தேவதூதனுடைய தீர்க்கதரிசனம்.** | | |
| **கேள்விகள்.** | **விடைகள்.** | |
| தீர்க்கதரிசனம் யாரைக் குறிக்கின்றது. ? | இஸ்ரவேலை(9:24) | |
| எழுபது கிழமைகள் என்றால் என்ன ? | அவை ஏழு எழுபது எழுபது வருடங்களைக்குறிக்கின்றது. அல்லது 490 வருடங்களாகும் | |
| இந்தக் காலம் எப்போது தொடங்குகின்றது. ? | எருசலேமின் அலங்கம் கட்டப்படத் தொடங்கும் போது. கி.மு 445 மார்சு 14இல் தொடங்கும். | |
| இந்த எழுபது வருட காலப் பகுதியின் மூன்று பிரிவுகள் யாவை | ஏழு வாரங்கள் அல்லது நாற்பத்தொன்பது வருடங்கள். | **கி. மு. 445–396 எருசலேம் அலங்கம் பிரச்சனைகளின் மத்தியில் கட்டப்படத் தொடங்கும்.** |
| வாரங்கள்? ஒவ்வொரு காலப்பகுதியிலும் நடைபெற்றது யாவை? | அறுபத்திரண்டு வாரங்கள் அல்லது 434 வருடங்கள். | **கி. மு 396 தொடக்கம் கி.பி. 32 வரை மேசியா சிலுவையில் அறையப்பட்டார்.** |
| | **சபையின் காலம்.** | |
| | ஒரு வாரம் அல்லது ஏழு வருடங்கள் . | இரகசிய வருகை தொடக்கம் அர்மகதோன் யுத்தம், அந்திக்கிறிஸ்த்துவின் ஊழியம், உண்மையான கிறிஸ்த்து மீண்டும் வருதல். |
| (*Daniel's Prophecy of The Seventy Weeks,* என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. By A. J. McClain, pages 30–31) | | |

## 10. **முகில்களுக்கு மேலான சச்சரவு.**

A. துக்கம் கொண்டாடும் மனிதன். (10:1-4).

1. கர்த்தரோடு தனித்திருப்பதற்காகத் தானியேல் மூன்று வாரங்களை நியமித்துக் கொண்டான். அந்த மூன்று வாரங்களாகிய நாட்கள் நிறைவேறுமட்டும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவுமில்லை, இறைச்சியும் திராட்சரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை, நான் பரிமளதைலம் பூசிக்கொள்ளவுமில்லை.

2. இந்த துக்க நாட்களை நியமிப்பதற்கு பல காரணங்கள் இருந்திருக்கின்றன.

a. அவனுடைய ஜனங்களின் பாவம்.

b. இந்த நீண்ட கால ( 490 வருடங்கள்) தன்னுடைய மக்கள் துயரம் அனுபவித்தார்கள் என்பவைகளுக்காக. ( 9ம் அதிகாரத்தில் அவை கூறப்பட்டுள்ளன)

c. செருபாபேலுடன் 40,000 யூதர்கள் மீண்டும் எருசலேம் திரும்புவதற்காகத் திட்டமிட்டனர், ,கோரேசு இதற்கான அனுமதியைக் கட்டளையிட்டு இரண்டு வருடங்கள் முடிவடைந்து விட்டன. (எஸ்றா1:1-4)

d. மீண்டும் எருசலேம் திரும்பிய யூதர்கள் அதிக துன்பங்களை அனுபவித்தார்கள் என்பதற்காகவும். **குறிப்பு**:-தானியேலுக்கு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எருசலேம் திரும்புவதற்கு கர்த்தர் அனுமதிக்கவில்லை. இவர் அரசில் உயர்பதவியில் இருந்தபடியால் யூதர்களுக்கு உதவியாக இருப்பதற்காகவும், அவருடைய வயதும் அதிகரித்துக் காணப்பட்டதாலும் கர்த்தர் தடுத்து வைத்திருக்க்கூடும்.

**B. தேவதூதன் பிரசன்னமாயிருத்தல். (10:5-21).**

1. தேவதூதனின் அடையாளம். (10:5-9).

a. அந்த தரிசனத்தைக் கண்ட போது தானியேலின் பெலனெல்லாம் போய், உருவம் மாறி வாடிப்போயிற்று; திடனற்றுப்போனார்.

b. தானியேலுடன் இருந்தவர்களும் தரிசனத்தைக் காணாதவர்களாக இருந்த போதிலும் அவர்கள் பயத்தினால் நிறைந்திருந்தார்கள். (10:7). (இதைப் போன்றது. அப்9:7, 8.)

**2. தேவதூதனின் வெளிப்படுத்தல் (10:10-19).**

a. பெர்சியாவின் ராஜாவினால் தடுக்கப்பட்டார். (10:13). இந்த ராஜா யார் ? நாம் அதைக் குறித்துக் கொள்ளுவோம்.

(1) அவன் வல்லமை உள்ளவன்— அவர் தனித்திருந்தார். - பரலோகத்தின் வல்லமையுள்ள தேவதூதன் இருபத்தொரு நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தான்.

(2) அவன் மாறுபாடானவன்—அவன் கர்த்தரால் நியமிக்கப்பட்ட தேவதூதனை எதிர்த்து நின்றான். இவன் பெர்சியாவின் மீது சாத்தானின் ஆதிக்கத்தைச் செலுத்தும் வண்ணம், சாத்தானால் ஒழுங்கு செய்யப்பட்டவனாக இருந்தான். (யோவ. 12:31; 14:30; 16:11; மத். 9:34; 12:24; எசா. 24:21.)

b. பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான் (10:13). இங்கே அடுத்த பிரதான தேவதூதன்பற்றிக் கூறப்படுகின்றது. பழைய ஏற்பாட்டில் மூன்று தடவைகள் இது போலக் கூறப்பட்டுள்ளது. (தானி. 10:13, 21; 12:1) புதிய ஏற்பாட்டில் இரண்டு தடவைகள் கூறப்பட்டுள்ளன. (யூதா1:9; வெளி. 12:7). இது ஒரு உதவிச்செயலாகும், எப்படியோ இங்கு பிரதான துதனாகிய மீகாவேல் உதவிசெயவதாகக் கூறப்பட்டுள்ளது. (தானி. 11:1.) நமக்குப் போராட்டங்கள் உண்டு. ஆனாலும் அவற்றை ஜெயிக்க கர்த்தர் உதவி செய்வார். (: 2கொரி. 10:3-5; எபே. 6:12; ரோம.

8:38; எபே. 1:21; 3:10; கொலே. 2:15.) இந்த தூதனானவர் சமாதானப்படுத்தினார், உறுதிப்படுத்தினார், பலப்படுத்தினார், அத்துடன் எதிர்காலத்தில் நடக்கப்போகும் முடிவு காலச் சம்பவங்களையும் தானியேலுக்கு கூறினார்.

3. தேவதூதர்களின் செயற்பாடுகள். (10:18, 19).

4. **தேவதூதர்களின் தீர்மானங்கள்**. (10:20, 21). அவர் மீண்டும் கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, பெர்சியாவின் சாத்தானுடன் மீண்டும் யுத்தம் செய்வதற்கு எச்சரிக்கையாக இருந்தார். அதுமட்டுமல்லாமல் கிரேக்கத்தின் அதிபதியோடும் யுத்தம் செய்வதற்கு எச்சரிக் கையாக இருந்தார். கிரேக்க ராஜ்ஜியத்திற்கு விரோதமாகவும் சாத்தான் புதிய தந்திரங்களைச் செய்து யுத்தம் செய்வான். ஆனாலும் மீகாவேல் திரும்பவுமாய் உதவிசெய்து வெற்றி கொள்ளுவார்.

**10. வானத்திற்கு மேலான யுத்தம்** – ஒரு மனிதன் கர்த்தருடைய மனிதனைஅதிகமாக நேசித்தான்.

ஐபிராத்து நதியோரத்தில் தானியேல் மூன்று வாரங்களாக உபவாசித்து ஜெபித்துக் கொண்டி ருந்தார், இந்த செயற்பாட்டிற்குப் பல காரணங்கள் இருந்தன.
1. எருசலேமிற்குச் செல்வதற்கு சிலர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள்.
2. மீண்டும் திரும்பிச் சென்றவர்கள் இருதய நோவுடன் இருந்தார்கள்.
3. இஸ்ரவேலர்களின் எதிர்கால துயரம் தீர்க்கதரிசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தபடியால்.

**ஒரு மனிதன் மெல்லிய வஸ்த்திரம் தரித்திருந்தான்**:- **தேவதூதன்**.

**தேவதூதனைப் பற்றிய விபரம்**. (10:5–9) **தேவதூதனின் அறிவிப்பு**. (10:10–17)
1. அவர்பெர்சியாவின் அதிபதியால் தாமதப்படுத்தப்பட்டார்.
2. பிரதான தேவதூதனாகிய மீகாவேலினால் உதவியளிக்கப்பட்டார்.

**பிரதான தூதனின் கடமைகள்**. (10:18, 19)—தானியேலை உற்சாகப்படுத்திப் பலப்படுத்தல். தேவதூதனின் தீர்மானங்கள். (10:20, 21)—மீண்டும் பெர்சியாவின் அதிபதியுடன் யுத்தம் செய்தல்.

11**. கர்த்தர் இல்லாத ராஜாக்களின் கால அட்டவனை**

இந்த அதிகாரம் வேதாகமத்திலுள்ள முக்கிய வரலாற்றை விபரமாகக் கூறுகின்றது. இதில் கி.மு. 529 முதல் கி.மு.164 வரையான காலப்பகுதியில் வரலாற்றைக் கூறுகின்றது. இதில் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உபத்திரப காலத்தில் நடப்பவற்றை கூறுகின்றது. இதில் ஆச்சரியப்படக் கூடிய விடயம்.

**A. மகா அலெக்ஸ்சாந்தர்**. **(11:1-20),** அவருக்கு முன்னிருந்தவர்களும், அவரை வெற்றி கொண்டவர்களும்.

1. கோரேசிற்குப் பிற்பாடு நான்கு அரசர்கள் பெர்சியாவை அரசாண்டார்கள். (தானியேல் இதனை எழுதும் போது கோரேசு அரசாண்டு கொண்டிருந்தார்) அத்துடன் நான்காவது அரசன் இவர்கள் யாவரையும் விட பணம்படைத்தவராக இருந்தார். இது நடந்தது (11:2).

a. கம்பிசஸ்(Cambyses) (529-522)

b. ஸ்மெர்திஸ் ( Smerdis) (522-521)

c. தரியு கைஸ்ராபஸ்(Darius Hystaspes ) (521-486)

d. அகாஸ்வேரு( Xerxes) (486-465) (இவரே அதிகம் பணம்படைத்தவராயிருந்தார் எஸ். 1:1-12)

2. இதன்பிற்பாடு ஒரு வல்லமையுள்ள ராஜா அரசாண்டார். (11:3). இவரே மகா அலெக்ஸ்சாந்தராவார். (336-323).

3. இந்த ராஜா தன் பெருமையினால் சடுதியில் மரித்துப் போவான். ராஜ்ஜியம் அவருடைய பரம்பரையினருக்குச் செல்லாது, ஆனால் வெளியார் மத்தியில் நான்கு ராஜ்ஜியங்களாக வகுக்கப்படும். (11:4). இதுதான் நடந்தது. அவர் மரித்து சிறிது காலத்தில், பிலிப்பு , அவரது ஒன்றுவிட்ட சகோதரன் அலெக்ஸ்சாந்தர் II, அவருடைய சட்டப்படியான மகன், கேகுலஸ் சட்டப்படியல்லாத மகன், இவர்கள் மூவரும் கொலை செய்யப்பட்டார்கள் அத்துடன் அலெக்ஸ்சாந்தரின் நான்கு தளபதிகளும் ராஜ்ஜியத்தைப் பொறுப்பெடுத்துக் கொண்டார்கள்.

4. அவருடைய தளபதிகளில் ஒருவரான ரொலமி (Ptolemy), எகிப்தில் தெற்கு ராஜ்ஜியத்தை ஆரம்பித்தார். அடுத்த தளபதியாகிய செலூக்கஸ் (Seleucus) என்பவர் வடக்கு ராஜ்ஜியத்தை சிரியாவில் ஆரம்பித்தார். ரொலமி (Ptolemy )கி.மு. 323—283 வரை ஆட்சி செய்தர், செலூக்கஸ் (Seleucus) கி. மு. 304—281 வரை ஆட்சிசெய்தார். (11:5).

5. இந்த இரண்டு ராஜாக்களும் ஒருவரோடொருவர் யுத்தம் செய்து கொள்வார்கள், இதனால் அவர்களின் தேசங்கள் நேசநாடுகளின் கீழ் ஆளுகை செய்யப்பட்டன. (11:6). எகிப்தும், சிரியாவும் கி.மு. 250 இல் நேசநாடுகளாகின. இரண்டு தளபதிகளும் மரித்தபிற்பாடு இது ரொலமியின் மகனாகிய பிலதெல்பஸ்சின் காலத்தில் ஏற்பட்டது, (283-246), ரொலமி II தன்னுடைய மகளாகிய பெர்நிஸ்(Bernice) என்பவளை அந்திக்கஸ் II, (Theos) செலுக்காஸின் பேரனுக்கு திருமணம் செய்து கொடுத்தார்.

6. இரண்டுவருடங்களுக்குப்பிற்பாடு அவளுடைய தகப்பனாகிய ரொலமிII, மரித்துவிட்டார், அதனால் அவளுடைய கணவனாகிய அந்திக்கஸ் அவளை விவாகரத்துச் செய்துவிட்டு மீண்டும் தன்னுடைய முதல் மனைவியைத் திருமணம் செய்து கொண்டான். அவளுடைய பெயர் லவோடிஸ் என்பதாகும்.

7. லவோடி, இன்னமும் வஞ்சகம் வைத்திருந்தபடியால், அந்திக்ஸ்சை நஞ்சூட்டிக் கொலை செய்தாள், அத்துடன் பெர்நிஸ்சைக் (Bernice) கொலை செய்தாள். அவள் தன்னுடைய மகனாகிய செலூக்கஸ் II (Seleucus II ) வை சிரியாவின் அரசனாக்கினான்.

8. அதேநேரம், எகிப்தில், பெர்நிஸ் சகோதரனாகிய ரொலமி III (Ptolemy III) தன்னுடைய தகப்பனாரை வெற்றி கொண்டு சிங்காசனத்தைக் கைப்பற்றினான். அவன் கி.மு. 246-221 வரை அரசாண்டான்.

9. ரொலமி III (Ptolemy III) சிரயாவை முற்றுகையிட்டு தன்னுடைய சகோதரியைக் கொலை செய்த லவோடியைக் கொலை செய்தான். இந்த எகிப்தின் முற்றுகைக் காலத்தில் செலூக்கஸ் II (Seleucus II) ஆசியா மைனருக்குள் ஓடி ஒளித்திருந்தான்.

10. ரொலமி III (Ptolemy III) சிரியாவைக் கொள்ளையிட்டு அதிகமான வெள்ளியையும், பெறுமதியான பொற்பாத்திரங்களையும் எகிப்திற்குக் கொண்டு சென்றான். (11:8-11)

11. செலூக்கஸ் II (Seleucus II), கி.மு. 240இல் ரொலமி III(Ptolemy III) எகிப்தில் கொலை செய்வதற்கு முயற்சித்துத் தோல்வி கண்டர். செலூக்காஸ் மரித்தார், அவருடைய மகன் அந்திக்கஸ் Antiochus III ராஜாவானான். இவர் சிரியாவை கி.மு. 223-187 வரை அரசாண்டான்.

12. ரொலமி III (Ptolemy III) மரித்தான், அவரது மகன் ரொலமி IV பிரப்ரொன் ராஜாவானான். (221-204).

13. இந்த இரண்டு ராஜாக்களும் மிகவும் கொடுமையான யுத்தத்தில் கி.மு. 217 இல் ரபியா என்ற இடத்தில் ஈடுபட்டார்கள். இந்த யுத்தத்திற்கு அதிகமான யானைகள் இருபகுதியினராலும் பயன்படுத்தப்பட்டன. இறுதியில் ரொலமி Ptolemy IV வெற்றியீட்டினார்.

14. கி. மு 230இல் ரொலமி Ptolemy IV மரித்தார், பின்பு ரொலமி Ptolemy V எபிபானஸ்(Epiphanes) ராஜாவானார் (203-181).

15. கி. மு 198இல் மகா அந்திக்கஸ் பாலஸ்தீனத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக சீதோனுக்கு வெளியே ரொலமி Ptolemy V உடன் மோதிக் கொண்டான்.

16. மகா அந்திக்கஸ் கி.மு. 193இல் தன்னுடைய மகளாகிய கிளியோபத்திராவை ரொலமி Ptolemy Vஇற்கு திருமணம் செய்துவைத்தார். .

17. இந்தக்காலத்தில் மகா அந்திக்கஸ் புகழ்வாய்ந்த காதேயிருந்த ஹனிபால் என்பவருடன் இணைந்து கொண்டான். அவர்கள் இருவரும் சேர்ந்து கி.மு. 188இல்எகிப்தை முற்றுகையிட்டார்கள். இவர்கள் ரோமர்களால் உலகத்திலிருந்தே அகற்றப்பட்டார்கள்.

18. அந்திக்கஸ்சின் இந்த உயர்வான திட்டம் முழுமையாகத் தோல்விகண்டது. அவர் கி.மு.187இல் மரித்தார். (11:19).

19. அவருடைய மூத்த மகன் செலூக்கஸ் IV பிலப்ரர் (Philopator), அரசாட்சி செய்தார், பின்பு அவருடைய பிரதம மந்திரியினாலே கொலை செய்யப்பட்டார். (11:20).

**B. அந்திக்கஸ் எபிபானேஸ் (11:21-35).**

1. இவர் மகா அந்திக்கஸின் இளையமகனாவார், இவர் கர்த்தருடைய வார்த்தையினால் கீழ்த்தரமானவனாக கணிக்கப்பட்டார். (11:21).

2. இவருடைய செல்லப் பெயர் எபிமானேஸ் என்பதாகும், அதன் அர்த்தம் மதிகெட்டவன் என்று இவரை நன்கு தெரிந்தவர்கள் அழைப்பார்கள்.

3. இவர் நடித்து மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தார். (1மக்கபேயர் ரோமன் கத்தோலிக்க வேதாகமத்தில். 3:29-31).

4. இவர் எகிப்திய ராஜாவாகிய ரொலமி பிலோமெற்றர் என்பவரை நைல்நதி கழிமுகத்திடலில் கி.மு. 170 இல் தோற்கடித்தார். இந்த இளம் ராஜா அவருடைய சொந்த மருமகனாவார், அவருடைய தாயாராகிய கிளியோபத்ரா அந்திக்கஸசின் சகோதரியாவார்.

5. தன்னுடைய நண்பர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டபடியால் ரொலமி தேற்கடிக்கப்பட்டார். (11:26).

6. அந்திக்கஸ் தன்னுடைய மருமகனை சிரியா தேசத்திற்கு எடுத்துச் சென்றார், அத்துடன் அவருக்கு நட்பாக இருப்பது போல நடித்தார். ஆனால் மருமகனோ அல்லது மாமனோ ஒருவரை யொருவர் நம்பவில்லை. (11:27).

7. அந்திக்கஸ் எகிப்தைக் கைப்பற்ற நினைத்தான், ஆனால் அதனை ரோமர்கள் தடுத்து நிறுத்தினார்கள். (11:30).

8. இவர் தன்னுடைய பைத்தியமான சீற்றத்தை எருசலேம்மீது காண்பித்தார். (11:28-35).

**C. அந்திக்கிறிஸ்த்து (11:36-45).**

1. இவர் தன்னுடைய சொந்த விருப்பத்திற்கமைவாக சகலவற்றையும் செய்வான். (11:36). (வெளி. 13:7; 17:13.)

2. இவன் தன்னை உயர்த்தி கர்த்தரை அவமதிப்பான். (11:36). (2தெச. 2:4; வெளி. 13:6.) இவன் கர்த்தரை அதிகமாக அவமதிப்பான். ஒருவரும் கற்பனை செய்து பார்க்கமுடியாதவாறு நிந்திப்பான்.

3. உபத்திரப காலத்தில் கர்த்தர் அவனைச் செழிப்படையச் செய்வார். 11:36. (வெளி 11:7; 13:4, 7, 10.) இந்தக்காலத்தில் கர்த்தர் நினைத்து நடக்கும், ஆனாலும் கர்த்தர் சகலவற்றையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்.

4. அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதியாமலிருந்தான் (11:37). கர்த்தர் என்ற சொல் பன்மையில் உள்ளது. சகல மதங்களுக்கும் எதிராக அந்திக்கிறிஸ்து பகமையைக் காண்பிப்பான். உண்மையில் இவனே மகாவேசியை, பாபிலோனை, ஆலயத்தையும், அழிப்பான். (வெளி. 17:5, 16.),

5. இவன் பெண்கள்மீது ஆசை கொள்ளமாட்டான். (11:37). இந்த சொல்லை விபரிப்பதற்காக மூன்று கருத்துக்கள் கூறப்படுகின்றன.

a. அன்புக்கான சாதாரண விருப்பம், பாலியல், திருமணம் என்பவையாகும். (1தீமோ. 4:2-3)

b. பெண்களுக்குரிய குணாதிசயங்கள், இரக்கம், கருணை, பெருந்தன்மை என்பவைகளாகும்.

c. குழந்தை பெற்றுக் கொள்ளுதலாகும். (1தீமோ. 2:15)

6. அவனுடைய கடவுள், அரண்களின் தேவனாகும் (11:38). அந்திக்கிறிஸ்த்து தன்னுடைய முழுவழத்தையும் இராணுவ வழங்களுக்காகச் செயற்படுவான்.

7. உபத்திரபத்தின் கடைசிக்காலத்தில், அவன் தெற்கு(எகிப்த்து) அரசனாலும், வட (ரஷ்யா—11:40). ராஜ்ஜியத்தின் அரசனாலும் தாக்கப்படுவான். எசேக்கியேல் புத்தகத்தின்படி (38-39) இந்த இரண்டு நாடுகளும் விஷேடமாக ருஷ்ஷியா இஸ்ரவேலின் மலையில் வைத்து கர்த்தரால் அழிக்கப்படும்.

8. ருஷ்ஷியாவின் தோல்விக்குப்பிற்பாடு, அந்திக்கிறிஸ்த்து பாலஸ்தீனத்தைக் கைப்பற்றுவான். (11:41). ஏதோமும், மோவாப்பும் அவனால் கைப்பற்றப்படமாட்டாது. இந்த நாடுகளை கைப் பற்றுவதற்கு கர்த்தர் அனுமதிக்க மாட்டார் எனச் சிலர் நம்புகின்றார்கள். ஏனெனில் இங்குதான் யூதர்கள் உபத்திரப காலத்தில் அந்திக்கிறிஸ்துவிடமிருந்து பாதுகாக்கப்படும் (Petra )இடம் உண்டு. (வெளி. 12:14.)

9. பாலஸ்தீனத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்காக, அந்திக்கிறிஸ்து எகிப்திற்குள் சென்று அதனைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பான். (11:42, 43).

10. அவன் எகிப்தில் இருக்கும் போது கடும் எச்சரிப்பான கிழக்கிலும், வடக்கிலுமிருந்து வதந்திகளை கேள்விப்படுவான். (11:44). இந்த வதந்திகளின் சரியான விபரம்தெரியாது. பலவிதமான ஊகங்கள் கூறப்படுகின்றன. அவையாவன,

a. இது யூதர்களுக்கெதிரான புரட்சி சம்பந்தமானது.

b. கிழக்கிலிருந்து வந்த குதிரைச்சேனைகளாகிய இராணுவங்களின் தொகை இருபது கோடியாயிருந்தது (வெளி. 9:16) இது கிழக்கு ராஜாவின் (வெளி. 16:12), தலைமையில் இடம் பெறும். இப்போது அவன் உலக தலைவனாவதற்கு முயன்று கொண்டிருக்கின்றான். இந்த நாடுகளில், சீனா, இந்தியா மற்றும் சில நாடுகளைக் கொண்டிருக்கும்.

c. இதில் ஆயிரம் யூதர்கள் எருசலேமிலிருந்து தப்பி பாதுகாப்பான மலைக்கு (Petra) ஓடிப்போவார்கள்.

11. அப்பொழுது அவன் அநேகரை அழிக்கவும் சங்காரம்பண்ணவும் மகா உக்கிரத்தோடே புறப்பட்டுப்போவான். (11:44). இங்கு மரித்தவர்களின் எண்ணிக்கை அளவிடமுடியாதது.

12. அவன் வெற்றிகரமாக தன்னுடைய தலமையகத்தை சீயோன் மலையில் அமைத்துக் கொள்ளுவான். இங்கு கர்த்தாதி கர்த்தரால் உபத்திரபகாலத்தில் அழிக்கப்படும்வரை அங்கேயே இருப்பான். (11:45). (வெளி. 19:11-21.)

| **11. கர்த்தரை அறியாத அரசர்களின் அட்டவணை.** |
|---|
| **தானியேல் 11:1–20 அலெக்ஸ்சாந்தரும் அவருக்கு முன்பிருந்த அரசர்களும்** |
| இந்த அதிகாரத்தில் 38 இற்குக்குறையாத தீர்க்கதரிசனங்களைக் கொண்டுள்ளது. அவைகள் கீழே கொடுக்கப்படுகின்றன.. |

| |
|---|
| பெர்சிய ராஜாக்களின் ஆளுகை. (வ. 2) |
| நான்காம் ராஜாவின் எகிப்துடனான யுத்தம். |
| அலக்ஸ்சாந்தரின் எழிற்சியும் வீழ்ச்சியும். (வ3, 4) |
| ராஜ்ஜியத்தின் நான்கு பிரிவுகள்.(வ. 4) |
| இரண்டு ராஜ்ஜியங்களின் இணைப்பு (வ. 6) |
| எகிப்தியர்கள் சிரியாவைத்திட்டமிட்டு கொள்ளையிடல். (வ. 8) |
| சிரியாவின் வெற்றியளிக்காத பழிவாங்கும் நடவடிக்கை. (வ. 9) |
| எகிப்தில் உள்நாட்டு யுத்தம். (வ. 14) |
| சிரியர்கள் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றுதல். (வ. 16) |
| சிரிய ராஜாக்களால் ஆலயம் கறைப்படுத்தப்படல். (வ. 31, 32) |
| மக்காபேயர்களின் புரட்சி(வ. 32) |
| மக்காபேயர்களின் தோல்வி (வ. 33) |
| **தானியேல். 11:21–35 அந்திக்கஸ் எபிபானேஸ்**. |
| இவன்மிகவும் கொடியவன், யூதர்களை வெறுக்கும் சிரியாவின் ராஜா சிறிதுகாலம் எருசலேமை கைப்பற்றி கி.மு. 175—164 வரை ஆட்சி செய்தான். |
| கி.மு. 171இல் செப்ரம்பர் மாதம் 6ல்அவன் கர்த்தருடைய ஆலயத்திற்கு எதிராக இழிவுபடுத்தும் செயல்களைச் செய்யத் தொடங்கினான். |
| மிகக் கொடுமையான அவமதிப்பு டிசம்பர் 15, 168இல்,பெரிய பெண்பன்றியை யூதர்களின் ஆலயத்தின் பலிபீடத்தில் பலிசெலுத்தினான். |
| மூன்று நாட்களுக்குள் 40,000 யூதர்களைக் கொலை செய்தான். |
| டிசம்பர் 25, 165 (செப்ரம்பர் 6, 171, திகதியிலிருந்து 2300 நாட்கள் சென்றபின்பு தானி. 8:9–14) சில யூத தலைவர்கள் மக்காபேயர்களை அழைத்து எருசலேமை மீண்டும் கைப்பற்றினார்கள், அத்துடன் சிரியர்களின் ஆளுகை முடிவுற்றது. |
| **தானியேல் 11:36–45 அந்திக்கிறிஸ்த்து** |
| இவன் முற்றிலும் சுய விருப்பம் கொண்டவன் |
| தன்னை உயர்த்தி கர்த்தரை அவமதிப்பான் |
| சிறிது காலம் விருத்தியடைவான். |
| தகப்பனாரின் தெய்வங்களை மதிக்கமாட்டான். |
| பெண்களில் விருப்பங் கொள்ள மாட்டான். |
| கோட்டைக்குள் இருக்கும் தெய்வங்களுக்கு மதிப்பளிப்பான். |
| தெற்கு, வடக்கு இரண்டு அரசர்களாலும் தாக்கப்படுவான். |
| பரிசுத்த நகரத்தைப் பிடித்துக் கொள்ளுவான். |
| எகிப்தையும் பிடித்துக் கொள்ளுவான். |
| எகிப்தில் இருக்கும் போது பயங்கரமான செய்திகளைக் கேள்விப்படுவான். |
| பரிசுத்த நகரத்திற்குத் திரும்பிவந்து போரை நடத்துவான். |
| சீயோன் மலையில் வைத்து கிறிஸ்த்துவினால் அழிக்கப்படுவான். |
| |

## 12.. **முடிவிற்கான நிபந்தனைகள்**.

**A. மீகாவேலின் ஊழியம். (12:1).**

1. மீகாவேல் இஸ்ரவேலைப் பாதுகாக்கும் தேவதூதன்.

2. உலகம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இஸ்ரவேலர்களின் பிரச்சனைக் காலங்களில் அவர்களுக்கு விடுதலை கொடுப்பதற்கான உதவிகளைச் செய்துவருவான். எதிர்காலத்தில் இடம்பெறவிருக்கும் வெறுக்கத்தக்க மணிநேரத்தைக் குறித்து இயேசு குறிப்பிடும் போது இந்த வார்த்தையை எடுத்துக் கூறியுள்ளார். (மத். 24:21, 22.) உபத்திரப காலத்தின் நடுப்பகுதியில்,

மிகாவேல், சத்தானை வானத்திலிருந்து தள்ளிவிடுவான். (வெளி. 12:7), பின்பு இவர் இஸ்ரவேல் தேசத்தில் தப்பியிருந்த 1/3 ஜனங்களை உள்வாங்குவதற்கு உதவி செய்வார். (சகரி. 13:8, 9; வெளி. 12:14.)

3. இஸ்ரவேலர்களின் பெயர்கள் ஏற்கனவே ஆட்டுக் குட்டியானவரின் புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தது. (யாத். 32:32; சங். 69:28; லூக். 10:20; மத். 24:22; வெளி. 20:12.)

**B. இரண்டு உயிர்த்தெழுதல்கள்**. **(12:2, 3).** புதிய ஏற்பாடும், பழைய ஏற்பாடும் இந்த உயித்தெழுதல்கள் இரண்டும் ஒரே நேரத்தில் இடம் பெறுவதில்லை என்பதை மிகவும் தெளிவாகக் கூறுகின்றன. இவைகள் 1000 வருடங்களுக்கு வித்தியாசப்படுகின்றன. இந்த உயிர்த்தெழுதல் **இரகசிய வருகையைக் குறிப்பிடவில்லை**.

1. **நித்திய வாழ்வுக்கான உயிர்த்தெழுதல்**. .

இது ஆயிரம்வருட அரசாட்சியின் ஆரம்பத்தில் இடம்பெறும். இதில், பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும், இரத்தசாட்சிகளாக மரித்த பரிசுத்தவான்களும், உபத்திரபகால பரிசுத்தவான்களும் அடங்குவார்கள். (யோபு19:25, 26; சங்.49:15; எசா.25:8; 26:19; ஓசி 13:14; எபி. 11:35; வெளி. 20:4, 6.) ஆத்தும ஆதாயம் செய்தவர்கள் குறித்து அவர்களுக்கு வழங்கப்படும் சன்மானம்குறித்தும் தானியேல் 12:3இல் கூறப்பட்டுள்ளது.

2. **நித்திய ஆக்கிளைக்கும் வெட்கத்திற்குமான உயிர்தெழுதல்**.

இது ஆயிரம்வருட அரசாட்சியின் இறுதியில் இடம்பெறும், இதில் சகல இரட்சிப்பில்லாத மக்களும் உள்ளடக்கப்படுவார்கள். (வெளி. 20:5.) கர்த்தராகிய இயேசு இரண்டு உயிர்த்தெழுதல்களைக் குறித்து **யோவான்5:28, 29**இல் கூறியுள்ளார்

**C. இரண்டு தீர்க்க தரிசனங்கள்**. **(12:4).** “தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து (எழுதி) வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்.”

**D. மூன்று கால அளவுகள்**. **(12:5-13).**

1. **1260 நாட்கள் days** (“ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லும்” 12:7.)

ஒருகாலம்=1வருடம்

காலங்கள்= 2வருடங்கள்

½ காலம்= ½ வருடம்

-------------------------------------------------

மொத்தம்= 31/2 வருடங்கள்

---

a. இரண்டு வேறு தூதர்கள், பழைய அரசியல்வாதிகளுக்கு தனிப்பட்டமுறையில் இடம்பெறும் இரண்டு தீர்க்கதரிசனங்களை அவதானித்துக் கொண்டிருப்பதை தானியேல் கண்டார். தேவதூதர்கள் கர்த்தருடைய இரட்சிப்பின் திட்டத்தில் அதிக அக்கறை காட்டினார்கள். (1பேது. 1:12) அந்த இரண்டு பேரில் ஒருவர் திடீரென எவ்வளவு காலத்திற்கு இந்தப்பயங்கரமான

உபத்திரப காலம் நீடிக்கும் என்று வினவினார். (12:6). (12:6). இவர்கள் இருவரில் ஒருசரார் கூட தானியேல் 9: 24—27 இல் கூறப்பட்ட எழுபது-வார தரிசனத்தைப் பற்றிக் கேள்விப்படவில்லை.

b. அவர்களுக்கு, இந்த வல்லமையுள்ள தூதன், இந்த பயங்கரமான உபத்திரபகாலம் 3 ½ வருடங்கள் நீடிக்கும், அதன்போது யூதர்களின் பெருமையும் வல்லமையும் உடைக்கப்படும். (12:7).

**2. 1290 நாட்கள். (12:11).** மேலே கூறப்பட்ட விடயங்களையே இதுவும் கூறுகின்றது, ஆனால் இங்கு மேலதிகமாக முப்பது நாட்கள் கூட்டப்படுகின்றது. நாங்கள் அதிகாரமற்றவர்களாக இருந்தாலும், இதனுடன் மேலதிகமாக ஒரு மாதம் சேர்க்கப்படுவது அவசியமாக இருக்கின்றது. காரணம் ஆட்டையும்,செம்மறியாட்டைய நியாம் தீர்ப்பதற்கு காலம் தேவைப்படும் மத்தேயு 25:31-46

**3. 1335 நாட்கள். (12:12).**

மீண்டும் இங்கே ஒரு நாற்பத்தைந்து நாட்கள் கூட்டப்பட்டிருப்தை பார்க்கின்றோம். இந்த நாற் பத்தைந்து நாட்கள் கூட்டப்படுவதற்கான காரணம் என்ன? இது அரசளுவதற்காக அரச நிர்வா கத்தை எற்படுத்துவதற்கான காலத்தின் தேவையாகும். இந்த 3 ½ வருடகாலப் பகுதியுடன் நாற்பத்தைந்து நாட்களைக் கூட்டுவதில் சில உபயோகமான வசனங்களை Dr. Franklin Logsdon என்பவர் எழுதியுள்ளார். "நாங்கள் ஐக்கிய அமரிக்காவில் இருக்கின்றோம், எங்கள் தேசங் களுக்குள் ஒருஒப்புவமை உள்ளது. ஜனாதிபதி நவம்பர் மாத ஆரம்பத்தில் தெரிவு செய்யப்ப டுவார், ஆனால் அவர் ஜனவரி 20ம் திகதிமட்டும் தன்னுடைய ஆட்சியைத் தொடங்க மாட்டார். இதற்குள் உட்பட்டகாலம் 70 நாட்களாகும், இந்தக் காலப்பகுதியில், இவர் தன்னுடை ய அமைச்சர் அவையுடனும், வெளிநாட்டு தூதுவர்களுடனும், மற்றும் அரசில் அங்கம் வகிப்பவர்களுடனும் தன்னை இணைத்துக் கொள்ளுவார். இங்கு மகா உபத்திரப காலத்திற்கும், ராஜாவை முடிசூட்டுவதற்கான காலப்பகுதிக்கும் 75 நாட்கள் தேவைப்படும்.

**E. நான்கு இறுதித் தீர்மானங்கள்.**

1. வல்லமையான தேவதூதன் தன்னுடைய இரு கரங்களையும் வானத்து நேராக உயர்த்தினார் (12:7). ஒருவருடைய கையை வானத்துக்கு நேராக உயர்த்துவது, தாழ்மையையும், முக்கியத்துவத்தையும் குறிக்கின்றது. ஆனால் இங்கு இரண்டு கரங்களும் உயர்த்தப்பட்டுள்ளன. (ஆதி. 14:22; உபா. 32:40) (வெளி. 10:1-6.)

2. அனேகர் உபத்திரப காலத்தில் பரிசுத்தமாக்கப்பட்டு இரட்சிக்கப்படுவார்கள். (12:1); இதில் யூதர்களும் புற ஜாதிகளும் அடங்குவார்கள். (வெளி. 7:1-17.)

3. துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள் (12:10). (வெளி. 9:20, 21; 11:9, 10.)


4. தானியேல் இந்த புத்தகத்தை மிகவும் ஜாக்கிரதையாக எழுதவேண்டி இருந்தது. (12:4) நீயோவென்றால் முடிவுவருமட்டும் போயிரு; நீ இளைப்பாறிக்கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய் என்றான். (12:9, 13).

| 12. முடிவுகால நிபந்தனைகள் |
|---|
| "*இதுவரை கானாத ஆபத்துக்கள் வரும்.... "* (12:1) |
| **உபத்திரப காலத்தில் உதவி செய்பவர்**. |
| தேவதூதனாகிய மீகாவேல் (12:1) |
| **உபத்திரப கால அளவு** |
| உபத்திரப காலமும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வுகளும், மூன்றுபகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன. **.** |
| **1260 நாட்கள் (12:7)** |
| மகா உபத்திரப காலம் மூன்றரை வருடங்களுக்கு நீடக்கும். |
| **1290 நாட்கள் (12:11)** |
| முதலாவது காலத்துடன் முப்பது நாட்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. இந்த நாட்கள் யூதர்களுடையதும், புறஜாதிகளுடையதும், தேவதூதர்களுடையதுமான நியாயத்தீர்ப்புக்குத் தேவையான நாட்களாகும். |
| **1335 நாட்கள் (12:12)** |
| இரண்டாவது காலத்துடன் நாற்பத்தைந்து நாட்கள் கூட்டப்படுகின்றது. இந்த நாட்கள் ஆயிரம்வருட ஆட்சி செய்வதற்கான ஆயத்தம் செய்படி தேவையான நாட்களாகும். |
| **உபத்ரப காலம்பற்றி அறிவதற்கான விருப்பம்**. |
| தேவதூதர்களும், ழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளும். (12:5–8) |
| **உபத்திரப காலத்தில் ஏற்படும் இரட்சிப்பு** |
| புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். (12:1). |
| அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்;." (12:10). |
| **உபத்திரப காலத்திற்கு முன்பு இடம்பெறும் நிகழ்வுகள்**. |
| அங்குமிங்கும் தேடுவார்கள் (12:4) |
| அறிவு பெருகும் (12:4) |
| **THE RESURRECTIONS FOLLOWING THE TRIBULATION உபத்திரப காலத்தைத் தொடர்ந்து உயிர்த்தெழுதல் இடம் பெறும். (12:2, 3)** |
| **At the Beginning of the Millenniumஆயிரம் வருட அரசாட்சியின் ஆரம்பத்தில்**. |
| Resurrection of Old Testament and tribulation saintsபழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்த வன்களினதும், உபத்திரபகால பரிசுத்தவான்களது உயித்தெழுதலும், |
| **ஆயிரம்வருட அரசாட்சியின் முடிவில்**. |
| இரட்சிக்கப்படாத சகலரது உயிர்த்தெழுதலும். |

**நன்றி கர்த்தாவே**

**திராணி**.

ன்




**நன்றி கர்த்தாவே**

**திராணி**.

**WILLMINGTON’S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC**. **Wheaton**, **IllinoisWILLMINGTON’S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC**. **Wheaton**, **Illinois**

Wiersbe, W. W. (1997, c1991). *With the word Bible commentary* (Da 1:1). Nashville: Thomas Nelson.